விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 ஆடி 15 ஷவ்வால் 9 இதழ் 168
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 31—7—82

சீனவில் மற்றுமொரு

## விமானக் கடத்தல் முயற்சி தோல்வி

பீக்கிங் ஜூலை 30
சீனவில் உள்ளூர்சேவையில் ஈடுபட்டுவந்த விமானமொன்றை திசை திரும்ப மேற்கொள்ளப்பட்ட முயற்சி தோல்வியில் முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

ஷங்காயிலிருந்து பீக்கிங்கிற்குச் சென்று கொண்டிருந்த பிரயாணிகள் விமானத்தை வூட்சிஎன்ற இடத்தில் வைத்து சிலர் திசை திருப்ப முற்பட்டபோது இம் முயற்சி விமானச் சிப்பந்திகளால் முறியடிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

இவ்விமானத்தில் பயணம் செய்த பிரயாணிகள் தொகை பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

கடந்த ஐந்து தினங்களுக்கு முன்னர் சீனவின் வடபகுதியிலிருந்து விமானமொன்றைக் கடத்த ஐந்து பேரினல் மேற்கொள்ளப்பட்டமுயற்சியும் தோல்வியடைந்தது தெரிந்ததே.
[வெ]

## இன்று

(யாழ்ப்பாணம்)
இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் யாழ்- கிளையும் இலங்கை சோவியத் நட்புறவுக் கழகம் யாழ்- கிளையும் இணைந்து நடாத்தும்பாரதிநூற்றுண்டு விழா சோவியத் நட்புறவுக் கழக உப-தலை வரும்,
(8-ம் பக்கம் பார்க்க)

# அவசரகாலச் சட்டம்
# நாடு முழுவதும் அமுல்!

## ஆயுதப்படை லீவுகள் ரத்து

(கொழும்பு)
ஆயுதப் படையினரின் லீவுகள் அனைத்தும் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## பத்திரிகை செய்தித் தணிக்கையும் அமுலானது

(கொழும்பு)
அவசரகால நிலைமை, நாடுபூராவும் நேற்று முதல் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதனுடன், பத்திரிகை செய்தித்தணிக்கையும் உடனடியாக அரசாங்கத்தினால் அமுல்செய்யப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில், அவசரகாலச்சட்டமும் பத்திரிகை செய்தித்தணிக்கையும் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டபோதிலும் அங்கிகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் கூட்டங்களுக்கு அனுமதி வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலி மாநகரசபை வட்டாரத்தில் இரவு ஏழு மணி முதல் அதிகாலை 5 மணி வரையிலான பத்துமணிநேர ஊரடங்குச் சட்டத்தையும் அரசாங்கம் அமுல்படுத்தியுள்ளது.

## யாழ். புனித மரியாள் பேராலய நேர்ந்தளிக்கும் விழாவில் பல்லாயிரம் மக்கள்

(யாழ்ப்பாண:]
இலங்கையில் இரண்டாவது பெரியஆலயமானயாழ். புனித மரியாள் பேராலயம் நேர்ந்தளிப்பு விழா நேற்று மாலை சிறப்பாகநடைபெற்றது மாலை ஐந்து மணியளவில் பல பகுதிகளிலிருந்தும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள், நூற்றுக்கணக்கான அருட்செல்விகள், துறவிகள் குருக்கள் ஆகியோர் ஆலயத்தில் குழுமி நின்ற காட்சி எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தியது.

மங்களகரமான நாதசுரத் தமிழிசை அனைவர் கவனத்தையும் ஈர்க்க பவனி ஒன்று ஆரம்பித்தது. மறைபரப்புப் பணிப்பாணைக் குழுவின் பொதுச்செயலர்பேரருள்திரு வே(f)ர்ணண்ட்வி(f)ருங்க்,
(8-ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு அமைச்சு அறிக்கை விபரம்

(கொழும்பு)
காலி சம்பவங்கள் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

''காலி நகரில் இம் மாதம் 26ம் திகதி வீட்டுச் சொந்தக்காரரொருவருக்கும் வாடகைகக் குடியிருப்பாளர் ஒருவருக்குமிடையே ஏற்பட்ட மனஸ்தாபத்தைத் தொடர்ந்து சில தீயசக்திகள் வன்செயல்களில் ஈடுபட்டன.

''இவ்வன்செயல்களை நாட்டின் மற்றைய பகுதிகளுக்கும் பரவச் செய்து இனக்கலவரங்களையும். அமைதியின்மையையும் ஏற்படுத்த சில தீயசக்திகள் திட்டமிட்டுள்ளதாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இதனைத்தொடர்ந்து நாடு முழுவதும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளது.

''இவ்வன்செயல் சம்பவங்களின்போது பத்து தீவைப்புச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. வீடுகள், கடைகள் தீக்கிரையாகியுள்ளன. கார்களுக்கும் தீ வைக்கப்பட்டுள்ளது. பஸ்களையும், கார்களையும் மறித்து தாக்குதல்களை சில தியசக்திகள் நடத்தியுள்ளன.

''இவ்வன்செயல்களினல் இரண்டு பேர் பலியாகியுள்ளனர். 65 பேர் காயமடைந்துள்ளனர். இது தொடர்பாக 70 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

''வன்செயல்களில் ஈடுபட்ட தீய சக்திகளுக்கு எதிராக பொலிசாரும், ஆயுதப்படையினரும் கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

''வன்செயல்களில் ஈடுபட்ட கூட்டத்தினர் கற்களினலும் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். இவ்வன்செயல்களின்போது பத்து கொள்ளைச்சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன.''

[கொழும்புக்கும் காலிக்குமிடையிலுள்ள தூரம் 115 கிலோ மீட்டராகும்].

சிமெந்து தொழிற்சாலை 3ம் கட்டம்:

## வேலைகளை விரைவாக பூர்த்திசெய்வதில் அமைச்சர் 'மத்யூ' அதிக அக்கறை!

### சாதனங்களை இயக்கியும் பார்த்தார்

[மாவிட்டபுரம்]
''காங்கேசன்துறைசிமெந்து தொழிற்சாலை 3ம் கட்டவேலைகளை எவ்வளவு விரைவாகப் பூர்த்தி செய்யமுடியுமோ அவ்வளவு விரைவாகப் பூர்த்தி செய்யுங்கள்'' என்று கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு. சிறில் மத்தியூ மேற்படி வேலைப்பிரிவிற்குப் பொறுப்பானஅதிகாரிகளிடம் வலியுறுத்தியுள்ளார்.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை 3ம் கட்ட வேலைப்பிரிவிற்கு நேற்றுமுன்தினம் அமைச்சர் மத்யூ திடீர் விஜயம் செய்தார். அவருடன் சிமெந்துக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. அசோகா சோமரத்தினவும் வந்திருந்தார்.

சுமார் 5மணித்தியாலம் 3-ம் கட்ட வேலைப்பிரிவிற்குள் சுற்றிப்பார்வையிட்ட அமைச்சர் வேலைகள் பூர்த்தியான பகுதிகளில் இயந்திர சாதனங்களை இயக்கிப்பார்த்தார். வேலைகள் பூர்த்தியடையாத பகுதிகளில் அதற்கான காரணம் என்ன என்பதைக் கேட்டறிந்தார்

ஏற்கனவே அமைச்சர் இங்கு வந்தபோது இந்த 3ம் கட்ட வேலைப்பிரிவை இந்த மாதத்தில் [ஜூலையில்] பூர்த்திசெய்து அடுத்த மாதத்தில் ஆகஸ்டில் வேலைகளை ஆரம்பிப்பதென்று தெரிவித்திருந்தார்.

அவ்வாறு திட்டமிட்டபடி வேலைகள் பூர்த்தியாக்கப்படவேண்டுமென்பதில் அமைச்சர் அக்கறை கொண்டிருந்ததுடன் எவ்வளவு விரைவில் பூர்த்திசெய்யமுடியுமோ அவ்வளவு விரைவில் பூர்த்தி செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பணித்திருந்தார்.
(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ். மாநகரசபை கூட்டத்தில் அமளி துமளி
### "யோகேஸ்வரபுரம்" தீர்மானம் நிறைவேறியது

[யாழ்ப்பாணம்]
யாழ். மாநகராட்சி மன்றத்தின் பொதுக்கூட்டம் முடிவடையும் சிறிது நேரத்தில் சபையில் பலத்த அமளி துமளியும், சலசலப்பும் ஏற்பட்டது.

உறுப்பினர்களிடையே ஆவேசமான கருத்து மோதல்களும் இடம்பெற்றன. உதவி முதல்வர் கொண்டுவந்த பிரேரணைஒன்றின் மீது திரு. சாந்திகுமார் (தமிழ் காங்கிரஸ்) எதிர்த்துப் பேசுகையிலேயே சபையில் அமளிதுமளி ஏற்பட்டது.

யாழ். மாநகராட்சிமன்றத்தின் மாதாந்தப் பொதுக்கூட்டம் நேற்றுப்பிற்பகல்முதல்வர் திரு இராசா விசுவநாதன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தின் ஆரம்பத்திலேயே மின்சாரத்திணைக்களம் தொடர்பாக உறுப்பினர்களிடையே சற்றுசூடாக விவாதம் ஆரம்பிக்கத்தொடங்கி அது தொடர்பானவிஷயத்தை அடுத்த கூட்டத்துக்கு ஒத்திவைத்ததைத் தொடர்ந்து மற்றும் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக் கூட்டம் முடிவுறும் நேரத்திற்கு சற்று முன்பதாக துணைமுதல்வர்திரு.ம. அலோசியஸ் பின்வரும் பிரேரணையைக்கொண்டுவந்தார்

''குருநகரின் மக்கள் குடியிருப்புக்கென ஒதுக்கப்பட்ட காணியினை அரசாங்க படையினருக்காக வாசஸ்தலங்களையும், காரியாலயத்தினையும் நிர்மாணிப்பதற்காக சுவீகரித்து நிர்மாண வேலைகளை ஆரம்பிக்க இருந்தபோது குருநகர் மக்களும், இச்சபையும் யாழ். பாராளுமன்ற உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரன் அவர்களை இவ்விடய
(8-ம் பக்கம் பார்க்க

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பதிவு செய்யப்படாத புனரமைக்கப்பெற்ற Isuzu–ELF150 15 சீற் கைறுவ் 1979 மொடல் வானும் C/90 ஹொண்டா மோட்டார் சைக்கிள்களும் விற்பனைக்குண்டு. நா. சாம்பசிவம் அன் கோ, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
3930

நுணுவில் சந்திக்கு அருகாமையில் சகல வசதிகளும் அடங்கிய கல்வீட்டுடன் 4 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்:– வா. க. செல்வத்துரை ''செல்வலக்சுமி'' மட்டுவில் தெற்கு சாவகச்சேரி
4036

கிறைண்டிங் மில்லுக்குத் தேவையான 10 H. P மோட்டர், 7½ H. P மோட்டர், 12 இஞ்ச் இங்கிலிஸ் கிறைண்டர் 2, சிலோன் கிறைண்டர் 1, நெல் குற்றும் 3ம் இலக்க, 7ம் இலக்க கல்லர்கள், பிளேட் வெட்டும் இயந்திரம், 12½ H P லிஸ்டர் என்சின் (வாட்டர் கூல்) ஆகியன விற்பனைக்கு உண்டு. தொடர்பு:– யாழ். கிறைண்டிங் மில்ஸ் பிரதான வீதி பருத்தித்துறை.
[4042]

பென்ஸ் 200 மிகச் சிறந்த நிலையில் குளிர் சாதனம் பொருத்திய 7ஸ்ரீ கார் விற்பனைக்கு உண்டு. ம. மாணிக்கவாசகன், 'ஸ்ரீமத்', பொற்பதி வீதி, கொக்குவில். [4039]

"Olivetti", "Underwood" ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும். 32, 4ம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம்.
[4015]

## தேவை

நெசவு தறிகள் இயக்குவதற்கு உகந்த வீடு அல்லது மண்டபம் யாழ் குடாநாடு பகுதியில் பிரதான வீதியில் மின்சாரம், தண்ணீர் வசதிகளுடன் வாடகைக்கு தேவை. உடன் விண்ணப்பிக்கவும். A. G. Alfred. 60 Peterson Lane. Colombo – 6. 4007

## காணவில்லை

அராலி வடக்கைச் சேர்ந்த முத்துக்குமாரு ரவிகுமாரை 27–5–82 முதல் காணவில்லை. உயரம் 4 அடி, பொதுநிறம் மெலிந்தவர் இடது கன்னத்தில் காயத்தினுல் குழி தகவல் தெரிந்தவர்கள் அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கோ, அல்லது திருமதி மு. சரஸ்வதி, அராலி வடக்கு வட்டுக்கோட்டை விலாசத்திற்கோ தகவல்தர வேண்டுகிறேன். மகனே எங்கிருந்தாலும் மன்னித்து உடன் வந்துவிடு. பிரிவால் வாடும் அம்மா, அம்மம்மா, சகோதரர்.
[4040]

## தவறிவிட்டது

கடந்த 28–07–82 அன்று யாழ்ப்பாணம் கிறுன் பஜார் வீதியில் அல்லது காரைநகர் யாழ்ப்பாணம் சேவையிலீடுபடும். 29ஸ்ரீ 1082 மினிபஸ்ஸில் Silvertone Tex Tils விலாசம் இட்ட திறப்பு கோர்வை ஒன்று தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து யாழ்ப்பாணம் கொழும்பு டெக்ஸ் டைல்சில் ஒப்படைக்கவும்.
(4033)

## கல்வி

GERMAN LANGUAGE
புதிய வகுப்புகள் 2-8-82 ல் ஆரம்பமாகின்றன. தொடர்பு கொள்ளும் விலாசம்: சபாநாயகம் 'றூடி கொட்' 33, கண்டி வீதி யாழ்ப்பாணம். (4027)

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் வடிகால்கள் துப்பரவு செய்வதற்கான கூறுவிலை அறிவித்தல்

மாநகராட்சி மன்ற எல்லைக்குள் அமைந்துள்ள 12 வடிகால்கள் துப்பரவு செய்வதற்கான கூறுவிலைகள் யாழ்ப்பாண மாநகராட்சிமன்ற ஆணையாளரால் 05–08–82–ந் திகதி நண்பகல் 12–00 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

கூறுவிலைகள் ரூபா 10/– செலுத்துவதன் பேரில் மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளச்கூடிய படிவங்களில் இணைப்பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

கூறுவிலைகள் அனுப்பப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வடிகால்கள் துப்பரவு செய்வதற்கான கூறுவிலைகள்'' எனக் குறிப்பிட்டு மாநகர ஆணையாளர், மாநகராட்சி மன்றம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து அறிந்துகொள்ளலாம்.

சி. வீ. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்.
மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்,
29–07–82. (4035)

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றம்

ஊர்காவற்றுறை சுருவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற சூசைப்பிள்ளை மனுவற்பிள்ளை சவிரிமுத்து என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்
மரணமெய்தியவர்
சவிரிமுத்து கைம்பெண் மேரி மாகிறெற் சுருவில், ஊர்காவற்றுறை
தத்துவம் வழ. இல: J/72
மனுதார்

இந்நீதிமன்றத்தில் மேற்குறித்த இலக்கங் கொண்ட மரணச்சொத்து நிர்வாகத் தத்துவ வழக்கு மேற்சொல்லப்பட்ட மரணமெய்தியவரின் மரணசாதனமற்ற சொத்துக்களுக்கு நிர்வாகத் தத்துவப் பத்திரம் பெற மேற்குறித்த மனுதாரால் தாக்கல் செய்யப்பட்டு அதற்கான பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1982ம் ஆண்டு ஆவணி மாதம் 5ம்திகதி முற்பகல் 9.00 மணிக்கு இந் நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் பூரண கட்டளையாக்கப் படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகிறுர்.

1982ம் ஆண்டு ஆடி மாதம் 2ம் திகதி

மன்றின் சட்டளைப்படி

தயாரித்தவர்
அ. மரியாம்பிள்ளை
மனுதாரின் சட்டத்தரணி
25/1. 4ம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்.

பதிவாளர்
அ. சிறில்
(4038)


VIMEL'S TEA

விமல்ஸ் தேயிலை

தேநீர்ப் பிரியர்களே!

மணம், குணம் தரத்தில் சிறந்த விமல்ஸ் தேயிலை (B, O. P. F) வாங்கித் தேநீர் அருந்துங்கள்

குறைந்த விலையில் சிறந்த தேயிலை
B. O. P. F. 500 கிராம் — ரூ. 13–00
200 கிராம் — ரூ. 5–50
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
(வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு)

விமல் எக்ஸ்போர்ட்

தலைமையகம்:
1. டாம் வீதி,
கொழும்பு – 12.
போன்:31641

கிளை
142, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
3949


## இன்று

[உரும்பராய்]

உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலயப்பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை மாலை வித்தியாலயத் திறந்தவெளி அரங்கில் நடைபெறவிருக்கின்றது. பேராசிரியர் கா. இந்திரபாலாவும் திருமதி இந்திரபா

[7–ம் பக்கம் பார்க்க]


'பியர்' அதன் முழுச் சுவையுடன்.
லயன் லாகர்




ரூபா 15/75



இனிமை! இளமை!! புதுமை!!!

சுண்டிக்குளி ஸ்ரீ ஞானவைரவர் ஆலய நிதிக்காக
மணிக்குரல் ஆதரவில் கே. ஆர். மகேந்திரன் வழங்கும்

★ சப்தஸ்வரங்கள் ★

தேனிசைமழை

ஈழத்து திரைப்பட வானொலி மேடை கலைஞர்களின் இசைநிகழ்ச்சி

வீரசிங்கம் மண்டபம்

நாளை 01-08-82 ஞாயிறு மாலை 6-00 மணிக்கு

கட்டணம் 50/-, 25/-, 15/-, 10/-, 05/- மட்டுமே

நிகழ்ச்சித்தொகுப்பு- மணிக்குரல் மேஜர் ஷண், செல்வி எஸ். ரேலங்கி

ரிக்கற் கிடைக்குமிடங்கள்:
* மணிக்குரல் விளம்பரசேவை * சன்யு என்ஜினியேரிங்
* சன்லைட் றைகிளினேர்ஸ் * கல்கிசன்ஸ், யாழ்ப்பாணம்
* மண்டப வாயிலிலும் ரிக்கற் பெறலாம்.

இது ஓர் ஷோபா கிரியேஷன்ஸ் தயாரிப்பு
(4018)


## கொங்கிறீற் பொருட்கள்

### கையிருப்பிலுள்ள பொருட்களின் விற்பனை

சகல பொருட்களின் விலையிலும் 15 % கழிவு

| பொருட்களின் விபரம் | அளவு | தொகை | ஒரு பொருளின் குறைக்கப்பட்டவிலை |
|---|---|---|---|
| 01. வளைந்த வேலித்தூண் | 13' 9'' | 66 | 267–75 |
| 02. வளைந்த வேலித்தூண் | 12' | 41 | 137–00 |
| 03. இடையே பாரம் தாங்கும் வளைந்த வேலித்தூண் | 11' 2'' | 52 | 219–30 |
| 04. இடையே பாரம் தாங்கும் வளைந்த வேலித்தூண் | 10' 8'' | 33 | 187–00 |
| 05. வளைந்த வேலித்தூண் | 10' | 128 | 172–55 |
| 06. முட்டுத் தூண் | 10' | 46 | 204–00 |
| 07. இடையே பாரம் தாங்கும் வேலித்தூண் | 7' | 291 | 77–35 |
| 08. இடையே பாரம் தாங்கும் வேலித்தூண் | 6½' | 30 | 72–25 |
| 09. மூலைத்தூண் | 6½' | 46 | 115–60 |
| 10. முட்டுத்தூண் | 5½' | 24 | 79–05 |
| 11. கேபிள் குழாய்கள் | | 780 | 29–75 |
| 12. கச்சூசு பேசன் (சீமெந்து) | | 17 | 89–25 |

மேற்காணப்படும் பொருட்கள் உடனடியாக விற்பனைக்குள்ளன. மேலும் இது பற்றிய விபரங்களுக்கு தயவு செய்து விற்பனை உத்தியோகத்தர் அல்லது சிவில் பொறியியலாளர் அவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

தொழிற்சாலை முகாமையாளர்,
காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை,
காங்கேசன்துறை.
1982—07—26. 4013

# இந்திரா - றீகன் பேச்சுவார்த்தையின் பலாபலன்

# இந்திய-அமெரிக்ககருத்துவேற்றுமைகள்நீங்கும்?

## வர்த்தக, விஞ்ஞான பொருளாதார, கலாச்சார ஒத்துழைப்புக்கு இணக்கம்!

வாஷிங்டன், ஜூலை, 30

அமெரிக்காவில் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டிருக்கும் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியும் அமெரிக்க அதிபர் திரு. றெனல்ட் றீகனும் வெள்ளை மாளிகையில் சந்தித்து நீண்ட நேரமாக நடத்திய பேச்சுவார்த்தையின் போது இரு நாடுகளுக்குமிடையே பரஸ்பரம் நீண்டகாலமாக இருந்து வரும் கருத்து வேற்றுமைகளை நீக்கி பொருளாதாரம், வர்த்தகம், விஞ்ஞானம், கல்வி, கலாசாரம் ஆகிய துறைகளில் இரு நாடுகளும் ஒத்துழைப்பதென்று இணக்கம் காணப்பட்டது என அறிவிக்கப்பட்டுள்ளது.

திருமதி காந்தி வெள்ளை மாளிகை வந்தடைந்தபோது முப்படைகளின் அணிவகுப்புடன் சிறந்த வரவேற்பளிக்கப்பட்டது.

திருமதி காந்தியும் திரு றீகனும் அரை மணித்தியாலம் தனிமையிலும் ஒரு மணித்தியாலம் உதவியாளர்கள் சகிதமும் பேச்சு நடத்தினர்கள்.

மத்திய கிழக்கு விவகாரம், ஆப்கானிஸ்தான் நெருக்கடி, இந்து சமுத்திர அமைதிப் பிரச்னை ஆகிய பல முக்கிய விவகாரங்கள் குறித்தும் இருவரும் நீண்ட நேரமாகப் பேசினர்.

### மௌனம்

பேச்சுவார்த்தையின் பின் வெள்ளை மாளிகையை விட்டு வெளியேறிய திருமதி காந்தி பத்திரிகையாளர்களிடம் எதுவும் தெரிவிக்க மறுத்து விட்டார்.

### இந்திரா கவலை

இந்தியாவின் பொருளாதாரம் வெகுவேகமாக வளர்ந்து வருகிறது. இந்நிலையில் எமது வளர்ச்சிக்குத் தடைவிதிக்கும் வகையில் வெளிநாடுகள் எமக்கு உதவி அளிக்க மறுத்து வருகின்றன. இச்செயல் எமது வெற்றிக்காக எம்மைத் தண்டிப்பதற்கு ஒப்பாகும் என்று திருமதி காந்தி திரு. றீகனிடம் கவலை தெரிவித்தாராம்.

### றீகன் கருத்து

உலகின் இரு பெரும் ஜனநாயகநாடுகளான இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும் இந்து சமுத்திரப் பிரதேசத்திலும் மத்திய கிழக்கிலும் அமைதி ஏற்படவேண்டும் என்றே இரு நாடுகளும் விரும்புகின்றன என்று திரு. றீகன் தெரிவித்தார்.

### இந்திய - அமெரிக்க விஞ்ஞான அமைப்புக் குழு

வர்த்தகம், பொருளாதாரம், விஞ்ஞானம், கலாசாரம், கல்வி ஆகிய துறைகளில் இரு நாடுகளும் ஒததுழைப்பதென்றும் விஞ்ஞானத்துறை ஒத்துழைப்புக்காக அமெரிக்க – இந்திய விஞ்ஞான அமைப்பு ஒன்றை நிறுவுவதென்றும் இப்பேச்சுவார்த்தைகளின்போது இணக்கம் காணப்பட்டது.

### ஷூல்ஸ் கௌரவம்

திரு. றீகனுடனான பேச்சுக்களின் பின் அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. ஜோர்ஜ் ஷூல்ஸ் திருமதி காந்திக்கு விருந்தளித்துக் கௌரவித்தார். (இ)

## பெய்ரூட்டிலிருந்து பாலஸ்தீன படைகள் வெளியேறுகின்றன

பெய்ரூட், ஜூலை 30

பெய்ரூட்டில் யுத்த நிறுத்தம் அமுல்செய்யப்பட்டதை அடுத்து அந்நகரிலிருந்து பாலஸ்தீன விடுதலை இயக்கப் போர்வீரர்கள் வெளியேறத் தொடங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலியப் படைகளினல் சுற்றிவளைக்கப்பட்ட பெய்ரூட் நகரிலிருக்கும் பாலஸ்தீன விடுதலை இயக்க வீரர்கள் அங்கிருந்து வெளியேற கொள்கையளவில் இணக்கம் தெரிவித்துள்ளதாக சவூதி அரேபியாவில் கூடிய அரபு லீக்கின் அமைச்சர்கள் மட்டக்குழு தெரிவித்த அதே வேளையில், மேற்கு பெய்ரூட்டிலிருந்து பாலஸ்தீன படைகள் வெளியேறத்தொடங்கியுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

பெய்ரூட்டிலும் சுற்றுப்புறத்திலும் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்காக அங்கு சர்வதேசப்படை ஒன்று நிறுவப்படவேண்டுமென்றும் அரபுலீக் கோரிக்கை விடுத்துள்ளது. (இ)

## மே. பெய்ரூட்டில் அமைதிநிலவுகிறது

பெய்ரூட், ஜூலை, 30

மேற்கு பெய்ரூட்டில் தற்போது அமைதி நிலவி வருவதாக அறிவிக்கப்பட்டது.

கடந்த ஏழு நாட்களாக இங்கு இஸ்ரேலிய விமானங்கள் குண்டு வீச்சுதலைமேற்கொண்டு வந்தன.

இந்தக் குண்டுவீச்சுக்களினல் 230 பேர் பலியாகியிருக்கலாம் அல்லது காயமடைந்திருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இங்கு காணப்பட்ட இடிபாடுகளுக்குள் மேற்கு பெய்ரூட்டின் இரு ஆஸ்பத்திரியும் அடங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (வெ)

## இந்தியாவுக்கு மீண்டும் அமெரிக்க யுரேனியம்

இந்திய தாராப்பூர் அணு உற்பத்தி ஆலைக்கு மீண்டும் அமெரிக்கா அணுசக்தி எரிபொருட்களை விநியோகம் செய்யும்.

திருமதி காந்திக்கும் திரு. றீகனுக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது இதற்கான இணக்கம்காணப்பட்டது.

இந்திரா–றீகன் பேச்சுவார்த்தையை இந்த இணக்கம் குறித்து உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

தாராப்பூர் அணு ஆலைக்கு அமெரிக்கா நீண்டகாலமாக யுரேனியத்தை விநியோகம் செய்துவந்தபோதிலும் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையேயான உறவில் கார்ட்டர் ஆட்சியின்போது விரிசல் ஏற்பட்டதைத் தொடர்ந்து அந்த விநியோகம் நிறுத்தப்பட்டதும் அதைத்தொடர்ந்து பிரான்ஸ் யுரேனியத்தை விநியோகம் செய்துவந்ததும் தெரிந்ததே. (இ)

## 3 மீனவரைக் காணவில்லை

சென்னை, ஜூலை 30

நாகபட்டினத்திலிருந்து மீன்பிடிக்கச்சென்ற மூன்று மீனவர்களைக் காணவில்லை என்று அறிவிக்கப்பட்டது. [வெ]

## பாக். வழக்கறிஞர்கள் அரசியலில் ஈடுபடத்தடை! நீதிமன்றங்களைப் பகிஷ்கரித்தனர்

இஸ்லாமாபாத், ஜூலை 30

பாகிஸ்தானில் பெரும்பாலான வழக்கறிஞர்கள் நேற்று நீதிமன்றங்களைப் பகிஷ்கரித்தனர்.

வழக்கறிஞர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது என பாகிஸ்தான் இராணுவ அரசாங்கம் உத்தரவிட்டதை அடுத்தே வழக்கறிஞர் இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இப்பகிஷ்கரிப்பு தொடரும் என்றும் தங்களது அரசியல் உரிமை நசுக்கப்படுவதைத் தாம்அனுமதிக்கப்போவதில்லை என்றும் வழக்கறிஞர் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார் (இ)

## இந்திராவின் அழைப்பை றீகன் ஏற்றுக்கொண்டார்

வாஷிங்டன், ஜூலை 30

அமெரிக்க ஜனதிபதி திரு. றெனல்ட் றீகன் இந்தியாவுக்கு விஜயம்செய்ய இணக்கம் தெரிவித்துள்ளார்.

வெள்ளைமாளிகையில் திரு. றீகனைச் சந்தித்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி இந்தியாவுக்கு வருமாறு விடுத்த அழைப்பை ஏற்றுக்கொண்ட அமெரிக்க அதிபர், இந்தியாவுக்கு விரைவில் விஜயம்செய்யமுடியும் எனத் தாம் நம்புவதாகத் தெரிவித்தார். (இ

## பொய்யான தகவல்களுடன் பிரான்சில் புகலிடம் கோரியுள்ள இலங்கையர்

### 4,000 பேரில் இந்திய பாகிஸ்தானியரும் அடங்குவர்

பாரிஸ், ஜூலை 30

பிரான்ஸில் அரசியல் புகலிடம் கோரி விண்ணப்பித்துள்ள 4 ஆயிரம் பேரில் இலங்கையர் பலரும் இருப்பதாக அறிவிக்கபட்டுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களும் இவர்களுள் அடங்கியுள்ளதாக அந்நாட்டின் சமூகசேவை ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இவர்களில் பலர் பொய்யான தகவல்களைக் கூறி அரசியல் புகலிடம் கோரியுள்ளபோதும், குழுவொன்று இவர்களின் மனுக்களை ஆராய்ந்துவருவதாகவும் இவர்களுள் ஐந்து சத வீதத்தினருக்கு மேற்படாத வெளிநாட்டவருக்கே அரசியல் புகலிடம் வழங்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது. [வெ–இ]

## ஜோதிலால் இடைநிறுத்தம்

புதுடில்லி, ஜூலை 30

ஹரியானு மாநில முன்னள் முதலமைச்சர் திரு. ஜோதிலால் லோக்தள் கட்சியிலிருந்து விலக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

(7–ம் பக்கம் பார்க்க)

## தென் ஈராக்கின் 60 சதுரமைல் பிரதேசத்தை ஈரான் கைப்பற்றியது

தெஹ்ரான், ஜூலை 30

ஈராக்கின் தென்பகுதியில் 60 சதுரமைல் பிரதேசத்தை கடும் சண்டையின்பின் ஈரானிய துருப்புக்கள் கைப்பற்றிவிட்டதாக தெஹ்ரான்செய்திகள் தெரிவிக்கின்றன.

வளைகுடா யுத்தத்தை விரைவில் முடிவுக்குக்கொண்டுவருவதற்கு வழிவகுக்கும் வகையில் தமது படைகள் விரைவில் ஈராக் தலைநகரான பாக்தாத்தை அணமித்து விடும் என்றும் ஈரான் இராணுவ பீடம் தெரிவித்தது.

இதேவேளையில் போர்முனையில் ஈராக்படைகளின் கடும் தாக்குதலைச்சமாளிக்கமுடியாத ஈரானியப்படைவீரர்கள் போர்முனையை விட்டு தப்பி ஒடுகின்றனர் என ஈராக்தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (இ)

## 2-ம் நூற்றுண்டில் சோழமன்னர் பாவித்த நாணயம், மட்பாண்டம் கண்டுபிடிப்பு

சென்னை, ஜூலை 30

கி. மு. 2ம் நூற்றுண்டில் சோழமன்னர்களினல் ஆட்சிக்காலத்தில் பாவனையிலிருந்த வெள்ளிநாணயம் ஒன்றும் களிமண் தட்டும் தர்மபுரி மாவட்டத்தில் கடலூரில் நிலத்துக்கு அடியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

நாணயத்தின் ஒரு புறத்தில் தமிழ் எழுத்துக்களுடன் சோழமன்னர்களின் இலச்சினையான புலியின் உருவமும் உதய சூரியனும் சந்திரனும் நட்சத்திரங்களும் காணப்படுகின்றன.

இந்நாணயத்தின் பிற்பகுதியிலுள்ள எழுத்துக்கள் தெளிவில்லாதிருப்பதால் வாசிக்கமுடியாதுள்ளது.

சிவப்புகறுப்பு நிறத்திலான களிமண் தட்டில் முதல் வரிசையில் ப. ரா என்ற தமிழ் எழுத்துக்களும் காணப்படுகின்றன.

### மணிவாக்கு

அறிவாளிகளின் இருதயம் துக்கவீட்டில் இருக்கிறது. ஆனுல் முட்டாளின் இருதயமோ கேளிக்கை வீட்டில் இருக்கிறது. —பைபிள்

## நமது நோக்கு

# யாழ் மறைமாவட்டத்தின் தனிப்பேராலயம்

யாழ்ப்பாணத்து கத்தோலிக்க மக்களின் ஆத்மீக வாழ்வில் பொன்ஞலே பொறிக்கப்பட வேண்டிய தினம் நேற்றையதினம். செயற்கரிய செய்த பெரியோரின் சாதனையை நினைவூட்டும் தினம்.

பல்லாண்டுகளாகஎடுக்கப்பட்ட பெருமுயற்சியே யாழ்ப்பாண ஆசனக்கோவிலாகும். அதன் அபிஷேக விழா, அதற்குரிய சிறப்புடனும் புனிதத்துடனும் நடந்தேறிய வைபவம் யாழ்ப்பாண மக்கள் அனைவருக்கும் பெருமையும் மகிழ்ச்சியும் அளிக்கும்.

ஆசனக்கோவிலை 'Cathedral' என்று ஆங்கிலத்தில் சொல்வதின் அர்த்தம் இன்று பலருக்குப் புரிவதில்லை' 'Cathedral' (கதீட்டிரல்) என்ற சொல்லில் Cathedra (கதிட்ரா) என்பது கதிரை; எனவே கதிரையை (ஆசனம் உடைய கோவிலே ஆசனக்கோவில். அந்தக்கதிரையில் இருக்கும் உரிமையுடையவர் ஆயர் (Bishop) ஒருவரே!

ஒரு சமூகத்துக்கு ஆசனக்கோவில் எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்ததென்பதை 'ஆசனக்கோவில்' என்ற சொல்லே உணர்த்துகின்றது.

இந்த வகையில் நேற்று நடைபெற்ற புனிதவிழா கத்தோலிக்க தமிழ் மக்களின் தலைநகர் அங்குரார்ப்பணம் என்று சொல்வது எவ்விதத்திலும் மிகையாகாது.

யாழ். மறை மாவட்டம் அம்மதத்தைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்களின் லௌகீக, ஆத்மீக வாழ்க்கைக்குப் பொறுப்பான ஒரு சீர்ப்படுத்திய அமைப்பு. அதன் பேராலயம். இலங்கையில் இரண்டாவதாஞலும், தமிழ்மக்களுக்கு முதலாவதென்பது வரலாற்றுச்சிறப்புநிறைந்த உண்மை.

நாட்டைப் பொறுத்தளவில், எமது தமிழ் சமூகத்தைப் பொறுத்தளவில், –ஏன் அகில உலகிலுமே பல துறைகளில் பெருமை பெற்ற யாழ்ப்பாணக்கத்தோலிக்க மக்கள் பட்டியல் இச்சிறு குறிப்பில்அடங்கா. இவர்களுக்கெல்லாம் வழிகாட்டிகளாக எம்மத்தியில் வாழ்ந்த அதிவணக்கத்துக்குரிய மேனுட்டு மிஷனரி மேதைகளுக்கு எமது அஞ்சலி உரித்தாகுக.

# "பாடசாலை அபிவிருத்தியே கிராமத்தின் முன்னேற்றம்"

### அனலைதீவு ப. மா. சங்கம் அங்குரார்ப்பணம்

அனலைதீவு]

அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் பாடசாலை மண்டபத்தில் அதிபர் திரு. செ நல்லையா தலைமையில் நடைபெற்றபோது நூற்றுக்கணக்கான பழைய மாணவர்கள் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திச்சபையின் உதவிச் செயலாளர் திரு. பொ. பாலசிங்கம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில்; கிராமங்களிலுள்ள பொதுஸ்தாபனங்களான கிராம அபிவிருத்திச்சங்கங்கள் சனசமூக நிலையங்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், மதஸ்தாபனங்கள் போன்றன யாவும் ஒருங்குகூடி தமது கிராம மக்களின் முன்னேற்றத்திற்குத் திட்டமிட்டுப் பணியாற்றவே கிராமமோதய சபைகள், பிரதேச சபைகள், மாவட்ட அபிவிருத்திச் சபைகள் போன்றன அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. கிராம மட்டத்தில் அதிகாரங்கள் பன்முகப்படுத்தப்பட்டு மக்கள் ஒற்றுமையாக சங்கங்கள்மூலமாகத் தமது திட்டங்களை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர கிராமோதய சபைகள் உதவுகின்றன. இச்சபைகளின் உறுப்பினர்கள் தமக்குள் இன, மத, சமூக வேறுபாடின்றி கிராம அபிவிருத்தியை முன்வைத்துச் செயற்படவேண்டும். பழைய மாணவர் சங்கம் மூலமாகப் பாடசாலையின் முன்னேற்றத்திற்குப் பாடுபட முன்வரும் இவ்வேளையில் பாடசாலையின் அபிவிருத்தியே ஒரு கிராமத்திற்கு முதற்படி' என்று கூறினுர்.

இளைப்பாறிய அதிபர் திரு. க. இளையதம்பி: இப்பாடசாலையின் நூற்றுண்டு கால வரலாற்றை சபையில் நினைவு கூர்ந்தார். பின்வருவோர் நடப்பு நிருவாகசபையாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்: பொ பாலசிங்கம் [உதவிச் செயலாளர் யா. அ. சபை), தலைவர்:செ. நல்லையா, உபதலைவர்; க. இளையதம்பி, செயலாளர்: ம. தங்கராசா, உப செயலாளர்: க சௌந்தரராஜ ஐயர், பொருளாளர்: செல்வி மு வசந்தாதேவி, உறுப்பினர்கள்: வை. சாம்பசிவம், பெ. துரைராசா. க. விநாயகமூர்த்தி, செல்வி. க. சுசீலாதேவி.

### நல்லைக்கந்தன் 7-ம் திருவிழா

விரிஞ்சன்மால் தேவராலும் வெலற்கரும்
விறலோனுகிப்
பெருஞ்சுரர் பதமும் வேத ஒழுக்கமும்
பிறவும் மாற்றி
அரூஞ்சிறை அவர்க்குச் செய்த அவணக்கோன்
ஆவிகொள்வான்
பரஞ்சுடர் உருவாய்வந்த குமரனைப் பணிதல்
செய்வோம்

— சந்தபுராணம்

### யாழ்ப்பாணத்துப் பொதுசன நூல்நிலையம் (11)

# நகரசபை நடத்திய நூல்நிலையம்

நிர்வாகத்திறமைவாய்ந்த நகரசபைத்தலைவர் நல்லையா அவர்களும், நகரசபைக்காரியதரிசி என்னும் சக்கடத்தார் பாலசுப்பிரமணியம் அவர்களும் நூல்நிலையத்தை நன்கு நடத்தப்பெருமுயற்சி எடுத்தனர்.

சக்கடத்தார் பாலசுப்பிரமணியம் படிப்பார்வம் நிறைந்த பெரிய உருப்படியான மனிதர் எந்த நேரமும் பெரிய நூல்கள் இரண்டாவது அவரின் கையில் இருக்கும். நூலகத்துக்கு நல்ல நூல்களைத் தெரிவதில் அவருக்குத்தனி ஆற்றல் இருந்தது. அவற்றை முதலிற்சுவைப்பவரும்அவரே.

#### நிரந்தர நூலகர்

நகரசபை பொறுப்பெடுத்து நடத்திய நூல்நிலையத்துக்கு அனுபவமும் பொறுப்பும் வாய்ந்த நூலகர் ஒருவர் உடனடியாகத் தேவையாயிருந்தது. முன்னர் கௌரவநூலகராயிருந்த சி. எஸ். இராசரத்தினம் மெற்றிக்குலேசன் சித்தியடைந்திருந்தார். அவரையே நூலகராக நியமிக்கவேண்டும் என்பது பாலசுப்பிரமணியம் அவர்களின் விருப்பம். ஆனுல் பகிரங்கமாக விளம்பரப்படுத்தி, விண்ணப்பங்களைப் பரிசீலனைசெய்து, நேர்முகப் பரீட்சை மூலம் தெரியவேண்டும்

### க.சி. குலரத்தினம்

என்பது பொதுவிதி. காலமோ உத்தியோகங்கிடையாதகாலம் பெரும் உத்தியோகத்தர் பலர் வேலையாட் குறைப்பிஞல்உத்தியோகமிழந்து வீட்டில் சோம்பியிருந்த காலம். பட்டதாரிகள் பலர் முப்பத்தைந்து ரூபாவுக்குப் பாடசாலைகளிற் படிப்பித்தகாலம் அது.

நகரசபையார் நூலகர் வேலைக்கு விளம்பரஞ் செய்ததும் பட்டதாரிகள் உட்படப் பலர் விண்ணப்பஞ்செய்தனர். முன்னரே மனப்பதிவுபெற்றிருந்த சி.எஸ். இராசரத்தினம் அவர்கள் நேர்முகப்பரீட்சையின் பின் நூலகராகத் தெரியப்பெற்ருர். அக்காலத்துக் கொழுத்தசம்பளம் மாதம் நாற்பதுரூபா. காலை ஏழுமணி தொடக்கம் மாலை ஏழுமணி வரை நூலகர் கடமை. நூலகர் தனியொருவராய்த்தொழிலாளி வேலைகள், பணியாளர் வேலைகள், எழுத்தாளர்வேலைகள், மேற்பார்வை வேலைகள் பதிவுவேலைகள், நூல்களைத் தூசுதட்டி அடுக்கும் வேலைகள் யாவும் செய்துவந்தார்.

#### நூலகம்

முன்னர் ஆஸ்பத்திரிவீதியில் விசாலமான கடையொன்றில் நடைபெற்றுவந்த நூலகம், நகரசபையார் பொறுப்பேற்றதும் வேறிடத்துக்கு மாற்றப்பெற்றது. அந்நாளில் U.D C. என்னும் நகரசபை தனக்கே சொந்தமான கட்டடமோ நிலமோ இல்லாமல் யாழ்ப்பாணம் கச்சேரியில் ஒருபகுதியில் நடைபெற்றுவந்தது.

இவ்வாருக இடநெருக்கடியிருந்தவேளையில் நகரசபையார் நூலகத்துக்கு வேறு இடந்தேடி, பிரதானவீதியில் சந்திக்கருகாமையில், அபூபக்கர் கட்டடத்தில் விசாலமான முகப்புக் கடையொன்றை மாதம் முப்பத்தைந்து ரூபா வாடகைக்கு எடுத்தார்கள் அது விசாலமானதாக இருந்தபோதிலு சந்தடியுள்ள சூழலில் அமைநததாகும்.

#### விசாலமான வேறு மண்டபம்

படிப்பதற்கு ஏற்ற சுற்ருடலில் விசாலமான மண்டபம் தேடித்திரிந்த நகரசபையார், தமக்கென ஒரு பாரிய நகர சபைமண்டபத்தைக் கட்டி எழுப்பத்தொடங்கிய காலம் அது.

யாழ்ப்பாண வாடிவீட்டுக்குத் தென்திசையில் சைவ வித்தியா விருத்திசங்கக்காரியாலயக் கட்டடத்தின் அருகில் உள்ள மாடிக்கட்டடத்தின் மேல்மண்டபத்தைப் புத்தூர் மழவராயர் குடும்பத்தாரிடம் மாதம அறுபத்தைந்து ரூபாவுக்கு வாடகையாகப் பெற்ருர்கள்

அம்மண்டபப் பெரியனவாய இரண்டு அறைகளையும், நீளமானவிருந்தையையும் கொண்டதாய், நல்லகாற்ருேட்டமும் பிறவசதிகளும் கொண்டிருந்தது. அம்மண்டபத்தில் 1936ஆம் ஆண்டு முதல் நூலகம் நல்லமுறையில் நடைபெற்றுவந்தது.

நூல்கள் வேருகவும், சஞ்சிகைகள் பத்திரிகைகள் வேருகவும் வெவ்வேறிடங்களில் வைக்கப்பெற்றிருந்தன. வாசிப்போர் தொகை நாளுக்கு நாள் பெருகிவந்தது என்பது அங்கே வருவோர் கையொப்பம் இடுவதற்கு வைக்கப்பெற்ற சி. ஆர். கொப்பி கொண்டு அறியக்கூடியதாயிற்று.

[தொடரும்]

## மக்கள் கருத்து

### ஒளி கிடைக்குமா?

பாராமுகமான நிலையில் சங்கானை மின் இணைப்பு வேலைகள் நடைபெற்று வருவது குறித்து இப்பகுதி வரியிறுப்பாளர்கள் கவலை கொள்ளும் நிலை ஏற்பட்டு வருகிறது.

சங்கானை (தவாலய வீதி மின்சாரக் கம்டம ஒன்று பழுதடைந்து மூன்றுமாத காலமாகியும் இதுவரை வேறு மின் கம்பம் மாற்றப்படாததால் இவ்வீதியில் உள்ள சிலர் மின் வெளிச்சமின்றிச்கடந்தமூன்று மாத காலமாகக் கஷ்டமுறும் நிலை இருந்து வருகிறது. இது விஷயமாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி சபையின் தலைவருக்கும் முறையீடுகள் செய்தும் இதுவரை இந்த மின் இணைப்புச் செய்யப்படவில்லை. 'தனி ஒரு மனிதனுக்கு உணவில்லையேல் இந்த ஜகத்தினை ஒழித்திடுவோம்' என்ற பாரதி பாடலை உச்சரிக்கும் இந்த நூற்றுண்டில் தனி ஒருவருக்கு மூன்று மாதகாலமாக இருள் கொடுக்கும் நிலையில் மாற்றம் ஏற்படாதது வேதனைக்குரியதாகும்.

மூன்றுமாத காலமாக ஒரு இடத்திற்கு மின்சாரம் இல்லாமலும், பழுதடைந்த மின் கம்பம் திருத்தப்படாமலும் இருப்பது இந்த நூற்றுண்டில் சங்கானையில்தான் நடக்கிறதென்ருல் மிகையாகாது.

இக்குறையை எமது தலைவர்கள், அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் கவனிப்பார்களா?

ஒளி விரும்பி

சங்கானை.

### இதுவரை வெளிவராத தகவல்கள்

யாழ்ப்பாண நூலகத்தின் ஆரம்ப சரித்திரத்தை எழுதி வரும் பெரியார் க. சி. குலரத்தினம் அவர்களையும், இவரது தொடர் கட்டுரையை வெளியிட்டுவரும் 'ஈழநாடு' இதழையும் மிகவும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். கட்டுரையாசிரியர் வெளிக் கொணர்ந்துள்ள விவரங்கள் இதுவரை காலமும் எவராலும் எடுத்துச் சொல்லப்படவில்லை. அத்துடன் இவ்விவரங்களை இப்பொழுது வெளிப்படுத்தும் திரு க, சி. குலரத்தினம் உண்மையாகவும் ஆதாரபூர்வமாகவும் எடுத்துச் சொல்லும் ஆற்றல் வாய்ந்தவர்.

யாழ்ப்பாண பொதுசன நூலகம் தொடர்பாக யாழ்ப்பாண மாநகரசபை வெளியிடக்கூடிய முதலாவது பிரசுரத்திலேயே இக்கட்டுரை முற்ருக இடம் பெற வேண்டும் என்பது தாழ்மையான வேண்டுகோள்.

கா. மாணிக்கவாசகர்
செயலாளர்.
இலங்கை நூலகச் சங்கம்,
வட பிரதேசம்.

### உடுவில் ஸ்ரீசிவஞான பிள்ளையார்கோவில்

(யாழ்ப்பாணம்)

உடுவில் ஸ்ரீ சிவஞானப் பிள்ளையார் கோவில் திருவிழா 26-7-82ல் ஆரம்பமாகியுள்ளது. 3-8-82 செய்வாய்க்கிழமை முற்பகல் தேர்த்திருவிழாவும் மாலை விசேட அபிஷேகமும் நிகழும். 4-8-82 அன்று தீர்த்தத்திருவிழாவும் கொடியிறக்க விழாவும் நடைபெறும். (ப]

### பயிற்சிக் கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

கிராமோதய சபைத்தலைவர்களுச்கான பயிற்சிக் கருத்தரங்கொன்று அடுத்த மாதம் 10 ம் திகதி முதல் 13- வரை அச்சுவேலி கிராம அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் நடைபெறவிருக்கிறது.

### கதிர்காமத் துதி

அமுதுபுலம்பி மெய்சோர்ந்தே அருள்வாய்
என்றே கைகூப்பித்
தொழுதுநிற்கும் அடியவர்தம் துயர்கள் நீக்கும்
திருமுருகா
எழுதமுடியா எழில்கொண்ட இனியகதிரமலைத்
தேவே
பழுதுபுரியும் சிறியோர்க்கும் டயன்செய்பாதம்
தொழுவோமே.

- பாலமுரளி

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு

# தமிழ்மக்கள் அபிலாஷைகள் என்ன என்பதை அறியலாம்

## தமிழ்காங்கிரஸ் பொதுச் செயலாளர்கருத்து

[எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழர் ஒருவர் போட்டியிடுவது குறித்து 'ஈழநாடு' 26-7-82 அன்று 'ஜனாதிபதி தேர்தலும் தமிழ் வேட்பாளரும்' என்று தலையங்கம் தீட்டியிருந்ததல்லவா' அது குறித்து தமிழ்க்காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் இங்கு தமது கருத்தை வெளியிடுகின்றார்.]

தங்கள் 26-7-82 திகதியிட்ட ஈழநாட்டின் 'நமது நோக்கு' என்ற ஆசிரியர் கட்டுரையைக் கண்ணுற்றேன்.

அதில் தாங்கள் பல முக்கியமான விடயங்களைக் குறிப்பிட்டிருக்கின்றீர்கள். அதேபோல அதி முக்கியமான கேள்விகளையும் எழுப்பியிருக்கின்றீர்கள். இவ்விரு விஷயங்களுக்கும் பதிலளிக்குமுகமாகவும், எதற்காக அ. இ. த. காங்கிரஸ் ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ் மகன் போட்டியிடவேண்டியது அத்தியாவசியமானது என்று கூறுவதற்கு காரணங்களையும் உங்கள் வாசகப் பெருமக்கள் முன் வைப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் தங்கள் பத்திரிகையூடாக அளிக்கும்படி மிகவும் தாழ்மையாக வேண்டுகின்றேன். இந்தக் கருத்துக்கள் வெளிவருவதன் நிமித்தம், தாங்கள் கூறுகிறபடி நன்கு அலசி ஆராய்ந்து ஒரு தீர்க்கமான முடிவுக்குவர உதவும் என்பதற்காகவும் உங்கள் பத்திரிகையூடாகக் கருத்துப் பரிமாறலாம் என்ற நோக்கத்துடனும் எமது கருத்துக்களைத் தருகிறோம்.

தமிழ் பேசும் மக்களின் எதிர்கால அபிலாஷைகளையல்ல நாம் கருதவேண்டியது. இன்றைய அபிலாஷைகள் என்ன? நீங்கள் அதைக் குறிப்பிடவில்லை இன்றைய நிலை மேலும் எவ்விதத்தில் மோசமடையலாம் என்பதைத் தாங்கள் குறிப்பிடவில்லை தமிழ் பேசும் மக்களின் எதிர்கால நலன் என்று நீங்கள் கூறியது எதைக் குறிப்பிடுகிறீர்கள் என்று அறியத்தரவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதன் நிமித்தம் எந்த விதத்தில் தீமை ஏற்படலாம் என்று நீங்கள் கருதுகின்றீர்கள்?

தமிழர் 1972 அரசியல் யாப்பை ஏற்கவில்லையென்று ''அரசாங்கத்துக்கும், இலங்கைக்கும், உலக நாடுகளுக்கும்'' நிரூபிக்க, 6-2-75 இல் நடந்த காங்கேசன்துறை இடைத்தேர்தலை தமிழர் ஐக்கிய முன்னணி பயன்படுத்தியது. அது மாத்திரமல்ல, அத்தேர்தல் முடிவை 'சுதந்திர இறைமையுள்ள, மதச்சார்பற்ற, சோஷலிச, தமிழ் ஈழ அரசை மீள்வித்துப் புனரமைப்புச் செய்ய' ஒரு ஆணையாகவும் கருதப்பட்டது.

த. வி. கூட்டணியினர் 22-7-77 நடந்த பொதுத் தேர்தலை, தமிழ் ஈழம் அமைப்பதற்கு ஒரு சர்வஜன வாக்கெடுப்பாகக் கணிக்கச் சொல்லித் தமிழ் இனத்தை வேண்டினார்கள். தேர்தலுக்குப் பிறகு, அதன் முடிவுகளைத் தமிழ் ஈழத்தை அமைப்பதற்கு ஒரு ஆணையாகக் கருதினார்கள். ஆனாலும், அவர்கள் போட்டியிட்டதோ, வடமாகாணமும், கிழக்கு மாகாணத்தில் ஒரு சில தொகுதிகளும், புத்தளம் தொகுதியுமேயாகும்.

தமிழ் பேசும் மக்கள் தமிழ் ஈழம் அமைப்பதற்கு உறுதி பூண்டிருக்கிறார்களென்பதைப் பிரதிபலிக்கக் கூடிய விதத்தில்' 19-5-79 ல் நடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களையும் ஒரு சர்வஜன வாக்கெடுப்பாக தமிழ் பேசும் மக்கள் கருத வேண்டுமென்று கூட்டணியினர் வேண்டினார்கள்.

தமிழ் பேசும் இனம் இன்னமும் தமிழ் ஈழத்தையே விரும்புகிறார்களென்பதை உலக நாடுகளுக்குக் காட்டுவதற்கு, 4-6-81 நடந்த அபிவிருத்தி சபைத் தேர்தல்களையும், தமிழ் பேசும் இனம் ஒரு சர்வஜன வாக்கெடுப்பாகக் கணிக்க வேண்டுமென்று கூட்டணியினர் கேட்டுக் கொண்டனர்.

### வடக்கு கிழக்கிற்கு அப்பால்

மேலே குறிப்பிட்ட தேர்தல்கள் அத்தனையும் இலங்கையில் வாழும் தமிழ் பேசும் மக்கள் எல்லோருக்கும் கூட்டணி முன் வைத்த விடயத்துக்கு வாக்களிக்க சந்தர்ப்பம் அளிக்கவில்லை. வடக்குக்கும் கிழக்குக்கும் அப்பாற்பட்ட இடங்களில் 60 வீதம் தமிழ் பேசும் மக்கள் வாழ்கிறார்கள் என்ற உண்மையை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. இந்த உண்மையைத் தெரிந்து கொண்டும்கூட, கூட்டணி மேற்குறிப்பிட்ட தேர்தல்களை சர்வஜன வாக்கெடுப்புகளாக நோக்க வேண்டுமென்று தமிழ் பேசும் மக்களைக் கேட்டுக் கொண்டது நேர்மையற்ற செயலாகும். அதுமட்டுமல்ல, மேற்குறிப்பிட்ட தேர்தல்களில் பல விஷயங்கள் மக்கள் முன்வைக்கப்பட்டன. உண்மையான சர்வஜன வாக்கெடுப்பாயிருந்தால், ஒரே ஒரு கேள்விதான் மக்கள் முன் வைக்க வேண்டும் என்பது தான் அரசியல் விஞ்ஞான நியதி.

அப்படியான ஒரே ஒரு விடயத்தை தமிழ்ப் பேசும் இனத்தின் முன் வைக்கவேண்டியது கூட்டணியின் அத்தியாவசிய கடமையாகும். அந்தக் கேள் ஒரு சர்வஜன வாக்கெடுப்பில், அதாவது இலங்கையில் பரந்து வாழும் தமிழ்ப்பேசும் மக்களுக்கு வாக்களிக்கும் சந்தர்ப்பத்தில் வைப்பதே கூட்டணிக்கு இருக்கும் ஒரே ஒரு கடமையாகும். அண்மையில் நடக்க இருக்கும் ஜனாதிபதி தேர்தலையே ஒரு சர்வஜன வாக்கெடுப்பாகக் கணிக்கலாம் என்ற உண்மையிலிருந்து விலகவே முடியாது. அந்தத் தேர்தலில் கூட்டணியின் ஒரே ஒரு இலட்சியம் என்றும் தமிழ் பேசும் மக்களுடைய அபிலாஷையென்றும் கூறிக் கொள்ளப்படும் தமிழ்ஈழம் என்னும் விவகாரத்தைத் தமிழ் பேசும் மக்கள் முன் வைப்பதற்கு கூட்டணி தயங்கக்கூடாது.

இந்தக் கட்டத்தில், தமிழ் தேசிய இனம் என்ன என்பதை கூட்டணியினர் தங்களின் 1977 பொதுத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருக்கின்றார்கள். ''இந்த நாட்டில் தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளும் ஒவ்வொருவரையுமே தமிழ் தேசியஇனம் என்று நாம் குறிப்பிடுகின்றோம்'' என்று திட்டவட்டமாக சொல்லப்பட்டுள்ளது. ஆகையால், தமிழ் ஈழம் பற்றிய அந்த அதி முக்கியமான கேள்வியைக் கூட்டணியினர் குறிப்பிட்டிருக்கும் அந்தத் தமிழ் தேசிய இனம் முன் வைப்பதே நேர்மை.

### தமிழ் ஈழத்தில் குடியுரிமை


அது மட்டுமல்ல, எவருக்குக் குடியுரிமை தமிழ் ஈழத்தில் வழங்கப்படும் என்ற அத்தியாயத்தின் கீழ், ''இலங்கையில் எப்பகுதியிலும் வாழும் தமிழ் பேசும் மக்கள் குடியுரிமை கேட்டால் தமிழ் ஈழத்தில் அவர்களுக்குக் குடியுரிமை வழங்கபபடும்'' என்று கூட்டணியினருடைய 1977 தேர்தல் விஞ்ஞாபனத்தில் இன்னொரு இடத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

தமிழ் பேசும் மக்களுடைய பிரச்னைகளைப்பற்றி இந்த அரசாங்கமோ, எந்த ஒருஅரசாங்கமோ ஒரு சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவார்களென்பதை நாம் அறவே மறந்துவிடவேண்டும். ஆகவே, ஜனாதிபதி தேர்தலை தமிழ் பேசும் இனமே அதை ஒரு சர்வஜன வாக்கெடுப்பாகக் கணிப்பதற்குக் கையாளவேண்டும். இந்தத் தேர்தலில் வாக்களிப்பதன் மூலம் தமிழ்பேசும் மக்களுடைய கருத்துக்களையும், அபிலாஷைகளைலம் உலகத்துக்குக் காட்டலாம். மேற்குறிப்பிட்ட தேர்தல்களைவிட ஒரு ஜனாதிபதித்தேர்தலையே உலக நாடுகள் உன்னிப்பாகக்கவனிப்பர்.

பெரும்பான்மையான தமிழ் பேசும்மக்கள் தமிழ்ஈழத்துக்கு எதிரென்று இந்த அரசாங்கம் பிரசாரம் செய்துகொண்டிருக்கின்றது. கிழக்கு மாகாணத்தில் வசிக்கும் தமிழ்பேசும் மக்கள், தமிழ்ஈழத்தை நிராகரித்து விட்டார்களென்றும் இந்தஅரசாங்கம் கூறிக்கொண்டிருக்கிறது. மலைநாட்டுத்தமிழர்களும் கூட தமிழ்ஈழத்தை எதிர்க்கின்றார்களென்று இந்த அரசாங்கம் கூறிவருகின்றது தமிழ்பேசும் முஸ்லிம் பெருங் குடிமக்களும் கூட தமிழ் ஈழத்தை ஆதரிக்கவில்லை என்றும் கூறுகின்றது. இப்படியான கூற்றுக்களுக்கு முற்றுப் புள்ளி வைப்பதற்கு கூட்டணி விரும்பினால், இலங்கையில் பரந்து வாழும் தமிழ்பேசும் மக்கள் முன் ஒரே ஒரு கேள்வியை முன்வைப்பதற்கு ஏன் தயங்குகின்றார்கள்? அது மாத்திரமல்ல, வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்கள் அல்ல இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுடைய பிரச்னைகளைத் தீர்க்கமுன்வரக் கூடியவர்கள். இந்நாட்டில் வாழும் தமிழ் பேசும்மக்களே அதைத்தீர்க்க வேண்டியவர்கள். ஆகையால், மசாசுசெற்ஸ் நிறைவேற்றிய தமிழ்ஈழத் தீர்மானமும், ஒரு தலைப்பட்ச தமிழ்ஈழப்பிரகடனமும் வேடிக்கைக் கூத்துக்கள் என்று சொன்னபிறகும்கூட இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்கள் முன் இறுதியாக தமிழ் ஈழ விவகாரத்தை முன்வைப்பதைவிட கூட்டணிக்கு மாற்று நடவடிக்கை ஒன்றும் இருக்கமுடியாது.

ஜனாதிபதி ஸ்தானத்தில் தங்களுக்கு மோசமில்லை என்று கூட்டணி கூறுவதில் அர்த்தமில்லை. எதிர்க்கட்சித் தலைவர் ஸ்தானத்தை ஏற்கமுடியுமென்றால், ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிடுவது பிழையாகாது. ஜனாதிபதி தேர்தலை ஒரு தென்னிலங்கைத் தேர்தல் என்றும் கருதமுடியாது. பாராளுமன்றத்துக்குச் சென்றது பாராளுமன்றத்தை மக்களுடைய அபிலாசைகளுக்கு ஒரு மேடையாகப் பாவிப்பதற்கென்றால், ஜனாதிபதித் தேர்தலையும் அதே மாதிரி, தமிழ் பேசும் மக்களுடைய அபிலாஷைகளுக்குச் சிறந்த மேடையாகப் பயன்படுத்தலாம். பாராளுமன்றத்துக்குப் போய்த்தான் மக்களுடைய அபிலாஷைகளைப் பிரதிபலிக்க வேண்டும் என்பதை பி எல்.

(8-ம பக்கம் பார்க்க)



மண்டைதீவு மகாவித்தியாலய சித்திரக் கண்காட்சி ஆரம்பித்ததினம் மண்டைதீவு கல்லூரிகளின் ஆசிரியர், ஆசிரியைகள் கண்காட்சியை பார்வையிடுவதையும் மேற்படி வித்திய லய சித்திர ஆசிரியை திருமதி. த. இராசலிங்கம் சித்திரங்களை விளக்குவதையும் இப்படத்தில் காணலாம். இக் கண்காட்சியைத் திறந்துவைத்த மகாவித்தியாலய அதிபர் திரு. சு. சண்முகநாதன், உதவி அதிபர் திரு. க. மாணிக்கவிங்கம் ஆகியோர் அருகில் காணப்படுகின்றனர். இவ் வித்தியாலய சித்திர ஆசிரியையினால் உருவாக்கப்பட்ட சிற்பங்களும், நூற்றுக்கணக்கான சித்திரங்களும் இக்காட்சியில் இடம் பெற்றன.

(படம்-வண்-திரு.)

# யன்னலை உடைத்து வீட்டில் திருட்டு!

(மாவிட்டபுரம்)

இரவு நேரம் வீடொன்றினுள் புகுந்த திருடர்கள் அங்கிருந்த பெறுமதியான பொருட்களைத் திருடிக் கொண்டு தலைமறைவாகிவிட்டனர்.

தெல்லிப்பழை டச்சு வீதியில் சந்திரசேகரம் பாலசுப்பிரமணியம் என்பவரது வீட்டில் இத்திருட்டு இடம்பெற்றுள்ளது.

இரவுப்படுக்கைக்குச் சென்ற பின்னர் 12-30 மணியளவில் நாய் குரைக்கும் சத்தம் கேட்கவே எழுந்து பார்த்ததாகவும், பின்னர் நித்திரைக்குச் சென்று மீண்டும் அதிகாலை 3 மணிக்கு எழுந்து பார்த்ததாகவும் அப்போது அலுமாரி திறக்கப்பட்டிருந்ததாகவும் அதற்குள் இருந்த சேலைகள், பெறுமதியான வானொலி, கைக்கடிகாரம், 200 ரொக்கப் பணம் ஆகியனவற்றைக் காணவில்லை என்றும் காங்கேசன்துறைப்பொலிசில் தெரிவித்துள்ள புகாரில் கூறப்பட்டுள்ளது.

குசினிப்பக்க யன்னலை உடைத்தே இத்திருட்டு இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. காங்கேசன்துறைப் பொலிசார் விசாரணை செய்து வருகின்றனர். [க]

# ''கலையரசின் வரலாறு எழுதப்பட வேண்டும்''

## காவலூர் எம். பி. யோசனை

[மண்டைதீவு]

''அமரர் கலையரசு சொர்ணலிங்கம் மறைவினால், ஈழத்து நாடகத்துறை ஒப்புயர்வில்லா ஒரு தலைவனை மட்டுமன்றி தனது வாழ்நாள் முழுவதும் நாடகக் கலைக்கு அர்ப்பணித்த மாபெரும் கலைஞனை இழந்துவிட்டது'' என்றுகாவலூர்எம். பி. பண்டிதர் கா.பொ இரத்தினம் அமரர் கலையரசு சொர்ணலிங்கம் மறைவையொட்டி வெளியிட்ட அனுதாபச்செய்தியில் தெரிவித்தார். அவர் அச்செய்தியில் மேலும் கூறியதாவது:

''பல நாடக நூல்களை எழுதியும், நடித்தும், தயாரித்தும், நாடகக்கலைஞர்களை உருவாக்கியும் கலைச்சேவை செய்தவர் கலையரசு சொர்ணலிங்கம். இவர் மறைந்தாலும், இவரது கலைச்சேவைகள் நிச்சயம் நிலைத்து நிற்கும். ஈழத்து நாடகத் தந்தையை இழந்து துயருறும் நாம் அவர் வளர்த்த நாடகக் கலையை பல துறைகளிலும் வளப்பதற் உறுதி பூணுவதே அவருக்குச் செய்யும் கைமாறாகும்.

''கலையரசு வரலாற்றை விரிவாக எழுதி வெளியிடுவதற்கும் அவர் நினைவாக ஒரு நாடகமன்றத்தை உருவாக்கி கலையரங்கு ஒன்றை அமைப்பதற்கும் தமிழ்மக்கள் முயல வேண்டும்''

### போக்லண்ட் பாதுகாப்புமண்டலம் ஆர்ஜெ. ஆட்சேபம்

லண்டன், ஜூலை 30

போக்லண்டைச்சுற்றிப்புதிய பாதுகாப்பு மண்டலம அமைக்கும் பிரிட்டனின் நடவடிக்கையை ஆர்ஜென்டீனா ஆட்சேபித்துள்ளது.

போக்லண்டைச் சுற்றி 240 கிலோமீட்டர்வரை பாதுகாப்பு மண்டலம் அமைக்கப்படும் என பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தட்சர் அறிவித்திருந்தார்.

இது ஒரு போர்நடவடிக்கையாகும் என ஐ. நா. பந்தோபஸ்து சபைக்கு ஆர்ஜென்டீனா அறிவித்துள்ளது.

### கல்விச்சுற்றுலா

[யாழ்ப்பாணம்]

தையிட்டி கணேசவித்தியாசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் யாழ். மாவட்டக்கல்விச் சுற்றுலாவொன்றை மேற்கொண்டனர்.

இவர்கள் இச்சுற்றுலாவின் போது பலாலிவிமான நிலையம் தோலகட்டி ஆச்சிரமம், அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை, சிறுவர் சீர்திருத்தப்பாடசாலை, நிலாவரை, திருநெல்வேலி, விவசாயப்பண்ணை, 'ஈழநாடு' பத்திரிகை அலுவலகம், கைதடி சிறுவர் இல்லம், விழிப்புலன், செவிப்புலனிழந்தோர் பாடசாலை, மில்க்வைற் தொழிற்சாலை, யாழ். தொல் பொருளகம், லெய்டன்பெனியன் தொழிற்சாலை, நல்லூர் சங்கிலியன் தோப்பு ஆகிய இடங்களைப்பார்வையிட்டனர்.

# 'இதுவரைவந்தஎந்த அரசுமே மக்கள்பிரச்னை தீர்க்கவில்லை'

## மக்கள் விடுதலை முன்னணி வடக்கில் தேர்தல்பிரசாரம்

(மாவிட்டபுரம்)

''இதுவரை ஆட்சியிலிருந்த அரசுகள் முதலாளித்துவ வர்க்க நலன்களை காப்பாற்றுவதற்காக செயல்பட்டனவே தவிர மக்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவோ, பிரச்னைகளுக்குத் தீர்வு காணவோ முன்வரவில்லை. இதனால் பல்வேறு துறைகளிலும் இன்றுபிரச்னைகள்பெருகியுள்ளன. ஆகவே வரும் தேர்தலிலாவது இந்தமுதலாளித்துவ வர்க்கத்தை தோற்கடித்து சோஷலிச அரசை அமைக்கக் கூடிய மக்கள் விடுதலை முன்னணியை வெற்றிபெறச் செய்ய வேண்டும்''.

இவ்வாறு பலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலைக்கு முன்பாக நடைபெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரக் கூட்டமொன்றில் பேசிய அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தலைவர் திரு.கே. டபிள்யூ. அமரஸ்ரீ கூறினர்.

திரு. எஸ். ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர்மேலும்பேசுகையில் கூறியதாவது;

''கடந்த 35 ஆண்டுகாலமாக இந்தநாட்டைமாறிமாறி ஆட்சி செலுத்திய அரசாங்கங்கள்சாதாரண ஏழைவிவசாய, பாட்டாளி மக்களது பிரச்னைகளுக்கு தீர்வு எதுவும் காணவில்லை. வாழ்க்கைப்பிரச்னைகள், கல்வி, வேலை வாய்ப்பு பிரச்னைகள் எதற்கும் தீர்வு ஏற்படவில்லை.

''இன்று இலவசக்கல்விக்கும் ஆப்புவைக்கும் முயற்சியில் ஜே. ஆர். அரசு இறங்கியுள்ளது மக்கள் போராடிப்பெற்ற இந்த இலவசசக்சல்வியை ஒருபோதும் நாம் இழக்கவிட மாட்டோம். முதலாளி வர்க்க நலனைக்காப்பாற்ற தனியார் வைத்தியக்கல்லூரி யொன்றையும் இன்றையஅரசு ஆரம்பித்துள்ளது. ஆகவே ஜே. ஆர். அரசானாலும் சரி. ஸ்ரீமாவோ அரசானாலும் சரி தமது வர்க்க நலனைக் காப்பாற்றவே செயல்படுகிறார்கள். வடக்கு, கிழக்கிலும் இதேதான் நடைபெறுகிறது. வடக்கு, கிழக்கு தமிழ் மக்களிடையே தாம் தலை நிமிர்ந்துவாழ முடியவில்லையே என்றஏக்கம் காணப்படுகிறது. இந்நிலையில் தனிநாடு கோரிக்கையும் எழுப்பப்படுகிறது. இதுவரைகாலமும் தமிழ்மக்கள் நம்பியிருந்த முதலாளித்துவ தமிழ் தலைவர்கள் தமது வர்க்க நலனுக்காகவே இக் கோரிக்கையை விடுக்கிறார்கள்.

''இந்த நாட்டில் ஏழை விவசாய, பாட்டாளி மக்களதும், மாணவர்களது பிரச்னைகள் தீர்வதற்கு சோஷலிச அரசு ஒன்று உருவாக வேண்டியதவசியம். அதற்காகவே மக்கள் விடுதலை முன்னணி முன்வந்திருக்கிறது. வரும் தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணியை ஆதரித்து சோஷலிச அரசு ஒன்றை அமைக்க வழி வகுக்குமாறு வேண்டுகிறோம்'' என்றார்.

இரத்தினபுரி மாவட்ட மக்கள் விடுதலைமுன்னணிஅமைப்பாளர் திரு. அபயவர்த்தன வீரகல்ல உட்பட பலரும் பேசினர்.

## கடன் தொகை அதிகரிக்க முடிவு

[கொழும்பு]

கல்விச்சேவை சிக்கன கூட்டுறவு அங்கத்தவர்களுக்கான கடன் வழங்கும் தொகையை ஐயாயிரம் ரூபாவாக அதிகரிப்பதென மேற்படி கூட்டுறவுச் சங்கத்தின் சிறப்புப் பொதுக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி சங்கத்தின் சிறப்புப் பொதுக்கூட்டம் சங்கப் பணிமனையில் திரு. எல். டி. பெரேரா தலைமையில் நடைபெற்றது.

சென்ற வருடத்தில் கிடைத்த 4 லட்ச ரூபா லாபத்தில் கூட்டுறவுச்சங்க ஊழியர்களுக்கு போனஸ் வழங்குவதென்றும் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தை அடுத்த வருடம் ஜனவரியில் நடத்துவதெனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது,

தமிழ் அங்கத்தவர்களின் நலன்கருதி சபை தமிழ்அங்கத்தவர்களுக்கும் தமிழ் படிவங்கள் பத்திரங்கள் கிடைக்கும் வகையில் நடவடிக்கைஎடுக்கப்படவேண்டுமெனவும் இதற்காக தமிழ் ஊழியர் ஒருவர் உடனடியாக நியமிக்கப்பட வேண்டுமெனவும் வடபகுதி பிரதிநிதி திரு. ந. சிவபாதம் விடுத்த வேண்டுகோளை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

## பொலிஸாருக்கு டிமிக்கி கொடுத்தவர் கைது!

[மாவிட்டபுரம்]

பொலிசாருக்கு டிமிக்கி கொடுத்துத்திரிந்த நபர் ஒருவர், வழக்கு விசாரணையொன்றுக்காக நீதிமன்றம் வந்தபோதுபொலிசாரிடம் மாட்டிக் கொண்டார்.

மயிலிட்டியைச்சேர்ந்த எஸ். செல்லையா என்பவருக்கு துப்பாக்கியைக்காட்டிகொலைசெய்வதாக பயமுறுத்திய சம்பவம் தொடர்பாக காங்கேசன்துறை பொலிசார் மயிலிட்டியைச் சேர்ந்த அல்பிரட் இராசநாயகம் என்பவரைதேடிவந்தனர். பொலிசாருக்கு டிமிக்கிவிட்டுத் திரிந்ததாகக் கூறப்பட்டஇவர் வழக்கு விசாரணையொன்றுக்காக மல்லாகம் நீதிமன்றத்திற்கு வந்திருந்தபோது பொலிசாரிடம் மாட்டிக் கொண்டார்.

வழக்கு விசாரணை முடிந்ததும் மெல்ல நழுவ முயன்ற இந்த நபரை பொலிசார் மடக்கிப் பிடித்து மல்லாகம்நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். நீதிபதி திரு.சீ.வி. விக்னேஸ்வரன் அவரை ஆகஸ்ட்2ம்திகதிவரை றிமாண்டில் வைக்க உத்தரவிட்டார்.


T. V. ஏரியல் அமைப்பில்
முதன்மைமிக்க ஸ்தாபனம்
சென்னை, ரூபவாகினி நிகழ்ச்சிகளை
T V யில் சிரமமின்றி பார்க்க
உத்தரவாதத்துடன் ஏரியல் அமைத்துத் தருவோம்.
நொடிப்பொழுதில், TV ஏரியல்
கோளாறுகள் சரி செய்யலாம்.
சுபநிகழ்ச்சிகளை வீடியோ படக்காட்சியில் எடுப்பதற்கு
குறைந்த கட்டணம்
பல்வேறு TV செட்டுகளை
பிஞன்ஸ் வசதியுடன் பெறலாம்.
மீண்டும் ஆகஸ்ட் 6-ந் திகதி முதல்
ரூபவாகினியில் தமிழ் திரைப்படம்
காண்பிக்கப்பட உள்ளதால் உங்கள் செட்டுகளை
தயார்படுத்திக்கொள்ள
வீனஸ்
றெக்கோடிங்
றேடியோ வாச் வேக்ஸ்
ஸ்ரீதர் தியேட்டர் முன்,
யாழ்ப்பாணம்.


## நல்லூரில் அம்புலன்ஸ் சேவை

(பண்டத்தரிப்பு)

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு செண்ஜேன்ஸ் அம்புலன்ஸ் படையின் முதலுதவிச் சிகிச்சை நிலையம் கொடியேற்றத் தினம் முதல்ஆலயவீதியில் இயங்கி வருகின்றது.

பக்தர்களின் நலனை முன்னிட்டு திருவிழாக்காலம் முடிவடையும் வரை இந்த முதலுதவிச் சிகிச்சை நிலையம் இயங்கும்.

கடந்த ஆண்டு உற்சவத்தின் போது இப்படையினர் ஆற்றிய பாதுகாப்பு, வீதி ஒழுங்குகளை நிலைநாட்டுதல், முதலுதவிச் சிகிச்சை ஆகிய சேவைகளை யாழ் மாநகர முதல்வர் திரு. இராசா விசுவநாதன், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர், ஆகியோர் பெரிதும் பாராட்டி சான்றிதழ்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. [இ]

### இன்று ஆரம்பம்

## நல்லூர்-திருக்கேதீச்சர பஜனைப்பாதயாத்திரை

[யாழ்ப்பாணம்]

நல்லூர் – திருக்கேதீச்சரம் வருடாந்த பஜனைப் பாதயாத்திரை நல்லை ஆதீனத்திலிருந்து இன்று மாலை 3 மணிக்கு ஆரம்பிக்கும். திருக்கேதீச்சர திருத்தலத்தில் நடைபெறும் கதிர்காமத் திருவிழா தீர்த்தத் திருவிழாவிற்கலந்து கொள்ளும் பொருட்டு இந்தப் பாதயாத்திரை நடைபெறுகிறது நல்லை ஆதீன கர்த்தா இந்தப் பாதயாத்திரையை ஆரம்பித்து வைப்பார்.

நல்லூர் கந்தசுவாமி கோவிலில் பஜனைக்கோஷ்டியினர் வழிபாடு செய்தபின்னர், நல்லூர்–பருத்தித்துறை செம்மணி வீதி வழியாக யாழ். நாயன் மார் கட்டு ஸ்ரீ ராசேஸ்வரி அம்பாள் கோவிலைச் சேர்வார்கள் பரமேஸ்வராக்கல்லூரி முன்னாள் அதிபர் திரு. மு. ஞானப்பிரகாசம் தலைமையில் யாத்திரை நடைபெறும்.

பாதயாத்திரைக் குழுவுக்கு அன்னை இராசேஸ்வரிஅம்பாள் ஆலயத்தில், ஆலய பரிபாலன சபை உபதலைவர் திரு. ச. பரநிருபசிங்கம் தலைமையில் வரவேற்பு நடைபெறும் அம்பாள் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடு முடித்துக் கொண்டு புராணபடன நிகழ்ச்சி அங்கு ஆரம்பமாகும் இக்குழுவினர், மாலை 7.00மணியளவில் புறப்பட்டு, செம்மணி வீதி, சண்டிவீதி, மறவன் புலோ, பூநகரி மார்க்கமாகக் கதிர்காமம் தீர்த்தத்திருவிழாவன்று 4-8-82 திருக்கேதீச்சரத்தைப் பாதயாத்திரையாகச் சென்றடைவர்.

### நெல்லியடி பொலிசார் கொலை:

## வர்த்தகர்கள் மீது தொடந்துவிசாரணை

(கரவெட்டி)

நெல்லியடி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக மேலும் 8 நெல்லியடி வர்த்தகர்கள் பொலிசாரினல் விசாரணை செய்யப்பட்டனர். சிங்கள வர்த்தகர் ஒருவர் உட்பட 8பேரே விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். இவர்களிடம் இருந்து வாக்கு மூலமும் பதியப்பட்டுள்ளது. பிரஸ்தாப வர்த்தகர்களில் இருவர் நீண்டநேரம் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர் என்று தெரிய வருகிறது.

நெல்லியடி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக இதுவரை நெல்லியடியிலுள்ள 19 வர்த்தகர்கள் விசாரணை செய்யப்பட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க நெல்லியடிக் கடைகள் இப்பொழுது மாலை 7 மணிக்கு முன்னரே மூடப்பட்டு விடுகின்றன. தனியார் கல்வி நிலையங்களும் மாலை 6 மணிக்குப் பின்னர் நடைபெறுவதில்லை. சினிமா படக்காட்சிகள் மாத்திரம் இருகாட்சிகள் காண்பிக்கப்படுகின்றன. பஸ்சேவை வழமையாக நடைபெற்ற போதிலும் இரவுவேளை நெல்லியடி பஸ் நிலையம் வெறிச்சோடிப்போய்க் கிடக்கிறது. மாலை 6 மணிக்குப் பின்னர் மக்களின் நடமாட்டம் மிகமிகக் குறைவாகவே உள்ளது.

ஆயுதப் படையினரும் அடிக்கடி ரோந்துசுற்றி வருவதுடன் இடைக்கிடை நெல்லியடிச் சந்தியில் வைத்து பொதுமக்களைச் சோதனையிட்டும் வருகின்றனர்.

## உற்சவம்

(சரவணை)

'குடிசைக் குமரன்' ஆலயமெனக் அழைக்கப்படும் சரவணை தெற்கு ஸ்ரீ செல்வக் கதிர்காம சுவாமி ஆலயத்தில் கதிர்காம உற்சவம் வழமை போல் நடைபெற்று வருகிறது. எதிர்வரும் 5-ம் திகதி உற்சவம் முடிவடையும்.

0 0 0

புங்குடுதீவு பெருங்காடு ஸ்ரீ முத்துமாரி அம்பாள்வருடாந்த உற்சவம் இம்மாதம் 26-ம் திகதி ஆரம்பமாகியுள்ளது. எதிர்வரும் 3ந் திகதி தேர்த் திருவிழாவும் மறுதினம்தீர்த்த விழாவும் நடைபெறும். [அ]

## ''பதினெண் புராணங்களில் தலைசிறந்தது''

[சரவணை]

''பதினெண் புராணங்களில் தலைசிறந்தது கந்தபுராணம். முருகக் கடவுள்மீது பக்தியை வளர்ப்பதற்கு இப்புராணம் நமக்கு வழிகாட்டுகிறது. புராணத்தின் பயனை அறிந்து அதைப் போற்றி நாம் வாழ வேண்டும். நாம் நல்வழி வாழ்வதற்கு அது நல் வழியைக் காட்டும்''

சரவணை–தேவபுரம் ஸ்ரீகதிர் வேலாயுதசுவாமி ஆலய முதலாம் திருவிழாவில் தினமும் நடைபெறும் கந்தபுராண வில்லிசை விரிவுரையைஆரம்பித்து வைத்துப் பேசுகையில் ஆசிரியர் திரு இ. செகசோதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு சின்னமணி குழுவினர் கந்தபுராணவில்லிசைநிகழ்த்தி வருகின்றனர். [அ]

## வெள்ளிவிழாக் கொண்டாடினர்

[கரவெட்டி]

சங். சகோதரி எம். லைசா தனது துறவற வாழ்வின் 25வது வருட வெள்ளிவிழாவை அண்மையில் அச்சுவேலி புனித லங்கா மாதா கன்னியர் மடத்தில் கொண்டாடினர்.

இவர் கிழக்கு மாகாணத்தில் 13 வருடங்களும், பதுளையில் 4 வருடங்களும் சேவையாற்றியுள்ளார். (அ)

## மிருதங்க இசை விழா

[கரவெட்டி

நந்தி இசை மன்றத்தின் நெல்லியடிக் கிளை நடாத்தும் 3 வது ஆண்டு மிருதங்க இசை விழா இன்று சனிக்கிழமை மாலை நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்தில் நடைபெறவிள்ளது.

உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வ. க. ஈசுரபாதம் தலைமையின் நடைபெறும் இவ் விழாவில் பிரதம விருந்தினராக தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் கலந்து கொள்கிறார்.

ஹரன் (யாழ்ப்பாணம்) Daily 5 Shows
KARRATE WARRIORS
(Strictly for Adults)

4-வது வாரம்
வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி: 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
கமலஹாசன்-ஸ்ரீதேவி
குரு (கலர்)

தினசரி 4 காட்சிகள்
ராஜா [யாழ்ப்பாணம்]
ஜெமினி, பத்மினி, எம். ஆர். ராதா, நாகேஷ்
சித்தி
(புதிய பிரதி

ரீகல் [யாழ்நகர்] தினசரி; 4 காட்சிகள்
ஒரு பெண்......அவள் வாழ நினைத்தாள்
.....ஆனால் அவளை வாழவிடவில்லை.
"மது" "செம்மீன்" புகழ்
மோகன் -- ஜெயபாரதி
நடித்த
கயலும் கயரும்
(மலையாளம் - கலர்)
கதை, வசனம், டைரக்ஷன்:
கே. எஸ். கோபாலகிருஷ்ணன்.

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
மேஜர் சுந்தரராஜன் - நாகேஷ் - ஜெயலலிதா நடிக்கும்
மேஜர் சந்திரகாந் (புதிய பிரதி)
6-8-82 முதல் Bud Spencer in
They Called Him Bulldozer
(Comedy - Color)

ராணி (யாழ் நகர்) 4-வது வாரம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சுஜாதா-ஸ்ரீதேவி
விஸ்வரூபம்
[ஈஸ்ட்மன் கலர்]

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
100வது வெற்றித் திருநாளை நோக்கி
கார்த்திக்-ராதா-தியாகராஜன்
அலைகள் ஓய்வதில்லை (கலர்)

ஸ்ரீதர் (யாழ். நகர்)
10-30, 2-00, 4-30, 7-00, 9-30
JIM KELLY in
The Tatoo Connection
(Karate Film)
அடுத்த வெளியீடு! பணமா பாசமா

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்-சாவித்திரி
மகாதேவி

லிடோ (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
அரசிளங்குமரி

சாந்தி (யாழ்நகர்) 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி சரோஜாதேவி
பாலும் பழமும்
புதிய பிரதி


# இன்றைய பலன்

ஆடி மாதம் 15-ம் திகதி

சனிக்கிழமை
(31—7—82)

மேடம்; சிந்தையில் தடுமாற்றம் ஏற்படும். செய்தொழிலால் நஷ்டம் ஏற்படும் புதிய முதலீடுகளை இன்று தவிர்த்தல் நன்று.

இடபம்: நீண்டநாள் எதிர்பார்த்த நல்ல திருப்பம் இன்று ஏற்பட முடியும். குடும்ப விவகாரங்களில் பிணைப்புகள் இறுகும். சுகபோகநாள்.

மிதுனம்: பேச்சு வார்த்தைகளில் உணர்ச்சிவசப்படாதிருப்பது விரும்பத்தக்கது. அவசர முடிவின் மூலம் விரோதத்தை தேடிக்கொள்வீர்கள்.

கடகம்: பெருமையுடன் தலை நிமிர்ந்து வாழ்வீர்கள். பிதா வழித்தனமும் சேரும். தான தருமங்களில் ஈடுபாடு ஏற்படும். புகழும் வந்துசேரும்.

சிங்கம்: கடன் தொல்லைகள் கட்டுப்படியாகும். தொழில் துறையில் வருவாய் அதிகரிப்பதற்கு இடமுண்டு உணவு விடுதி நடத்துபவர்களுக்கு உற்சாகமான தினம்.

கன்னி: இரக்கசிந்தை மேலிடும், பொதுப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். பெரிய இடத்துத் தொடர்புகள் ஏற்படுவதற்கும் இடமுண்டு.

துலாம்: பொருள் முடை தென்படும். கடன்பட நேரிடும். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாது போகலாம். அற்பவிடயத்துக்கும் ஆத்திரம் அடைவீர்.

விருச்சிகம்: இனபந்துகள் மத்தியில் பூசல்கள் தோன்றும். மனக் குமைச்சல்களினால் வேதனைப்படுவீர்கள். சிறிய விஷயத்திற்கும் இடமுண்டு. தெய்வ நம்பிக்கை வேண்டும்.

தனு: ஒளிமயமான சூழ்நிலை உருவாகும். வீட்டில் உள்ளவர்களின் அன்பும் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும். நல்ல தினம்.

மகரம்: சிந்தனை அலைகள் மோதும். செய்தொழிலில் பதட்டநிலை தென்படும். அவசர முடிவின் மூலம் குறை கேட்க நேரிடும். உடல் நலத்தைப் பேணவும்.

கும்பம்: பொன்னான சந்தர்ப்பம் இன்று கிடைக்கும். திறமைக்கு முதலிடம் உண்டு. பெரியவர்களின் ஆதரவும் கிடைக்கும்.

மீனம்: வருமானத்தில் திருப்திகரமான நிலை தென்படும் பத்திரர் வழியால் புதினமும் கிடைக்கும். புதுமையான எண்ணங்களும் உருவாகலாம்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## நவ நாள் உற்சவம்

[கரவெட்டி]

கரவெட்டி பரலோக மாதா ஆலய வருடாந்த நவநாட்திருவிழா அடுத்தமாதம் 6ம் திகதி மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. 15 ம் திகதி மாலைஇடம்பெறும் திருச்சொரூப சுற்றுப்பிரகார ஆராதனையுடன் திருவிழா நிறைவு பெறும். 14ம் திகதி இரவு தேவநற்கருணைச் சுற்றுப்பிரகார ஆசீர்வாதம் இடம் பெறும்.

● ● ● ●

ஆனையிறவு புனித அன்னம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் அண்மையில் நடைபெற்றது. பரந்தன் பங்குத்தந்தை வண. பிதா சீ. ஓம்லோ அடிகளார் உற்சவத்தை நடாத்தி வைத்தார். [உ]

## இன்று

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

லாவும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள்,

பிரதி அதிபர் திரு அ. பஞ்சாட்சரம் வரவேற்புரையும வட்டாரக்கல்வி அதிகாரி திரு. ஆ. வ. தங்கராசா சிறப்புரை வழங்குவார். பேராசிரியர் இந்திரபாலா பரிசு நாள் பேருரை நிகழ்த்துவர். திருமதி இந்திரபாலா பரிசுகளை வழங்குவார். ஆசிரியர் திரு. க. கணபதிப்பிள்ளை நன்றி தெரிவித்துப் பேசுவார். (அ)

# ஆலயமாக மாறும் தபால் பெட்டி

[சங்கானை]

சண்டிலிப்பாய் சீரணிச் சந்தியிலுள்ள தபால்பெட்டி கடந்த பல மாதங்களாக திறந்த நிலையில் உள்ளது. இதைக்கண்ட வைரவர் பக்தர் ஒருவர் வெள்ளைத் தீந்தையால் தபால்பெட்டிக்குள் வைரவர் சூலமொன்றைக் கீறி பூவு வைத்து தினமும் வழிபட்டு வருகிறார்.

இச்சந்தியில் காலையில் பஸ் வண்டியை எதிர்பார்த்து நிற்கும் பிரயாணிகளும் இப்புதிய 'வைரவர் ஆலயத்தை' வணங்குகிறார்கள். ஆனால் கடந்த பல்லாண்டு காலமாக தபால் அனுப்பும் சீரணிச்சந்தி மக்கள் கட்டுடை உபதபால் நிலையம் சென்று தங்கள் கடிதங்களைச் சேர்க்கவேண்டிய கஷ்ட நிலைக்குள்ளாகியுள்ளனர்.

# "பொதுச் சேவையில் சமூக சேவை இயக்கங்கள் முழுதாக இயங்க வேண்டும்" — வைத்திய அதிகாரி

(கிளிநொச்சி)

"கிளிநொச்சி ஆஸ்பத்திரியின் தேவைகள் அதிகம் உண்டு. இத்தேவைகளை அரசின் உதவிகொண்டு பூரணப்படுத்தமுடியாது. பொதுமக்களின் ஒத்துழைப்பைக் கொண்டே இவற்றைநிவர்த்தி செய்யலாம். எனவே சமூக சேவை இயக்கங்கள் பொதுச் சேவைக்கு தம்மை முழுமையாக அர்ப்பணிக்கவேண்டும்."

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் பி. நவரெத்தினராசா கிளிநொச்சிஆஸ்பத்திரி மண்டபத்தில் நடைபெற்ற அன்பளிப்பு வைபவத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

இவ்வைபவத்தில் அம்பாள் நகர், கனகபுரம் ஆகியஇடங்களின் கிராமமுன்னேற்றச் சங்கங்கள் 1500 ரூபாவிற்குமேல் பெறுமதியான மின்சார உபகரணங்களை கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு அன்பளிப்பாக வழங்கின.

டாக்டர் பி. நவரெத்தினராசா தமது உரையில் கனகபுரம், அம்பாள் நகர் ஆகியனவற்றின் முன்மாதிரியைப் பின்பற்றி ஏனைய இடங்களிலுள்ள சனசமூக நிலையங்களும் பொதுச் சேவைக்குத் தம்மை அர்ப்பணிக்கவேண்டுமென்றார்.

இவ்வைபவத்தில் கிளிநொச்சி ஆஸ்பத்திரி அபிவிருத்தி சபைத் தலைவர் டாக்டர் எம். யோகேஸ்வரதேவன், தெங்குபனம் பொருள் கூட்டுறவு சங்க உதவி முகாமையாளர் திரு. சிவபாலன் உட்படப் பலர் உரையாற்றினார்கள். [சி]

## ஜோதிலால்....

(3-ம்பக்கத் தொடர்ச்சி)

இவர் ஆறு ஆண்டுகளுக்குக் கட்சியிலிருந்து நிறுத்திவைக்கப்பட்டுள்ளார் என அக்கட்சியின் தலைவர் திரு. சரண் சிங் தெரிவித்துள்ளார். (இ)

## சில்லாலை கதிரை மாதா உற்சவம்

(பண்டத்தரிப்பு)

சில்லாலை கதிரை மாதா ஆலய வருடாந்த உற்சவம் அடுத்த மாதம் 6ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று 13 ம் திகதியன்று யாழ் பேராயர் அதிவந். தியோகுப்பிள்ளை அடிகளாரால் உறுதி பூசுதலும் முதல் நன்மை வழங்கலும் நடைபெறும். 14 ம் திகதியன்று சுற்பிரசாத சுற்றுப்பிரகாரமும், 15ம் திகதி யன்று திருப்பலிப்பூசையும், திருச்சுரூபபவனியும் நடைபெறவுள்ளது. இதைத் தொடர்ந்து வழமைபோல அன்னதானமும் நடைபெறவிருப்பதாக சில்லாலை கதிரை மாதா ஆலய பரிபாலன சபையின் செயலாளர் டாக்டர் சுகர்தன் இன்னுசித்தம்பி தெரிவித்தார். உற்சவ நாட்களில் அருட்திரு கரவையூர் செல்வம் அவர்களின் ஞானபோதனையுரையும் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். [இ]


ரஸ்ற்ரவல் சேவிஸ்
(Trust Travel Service)
AEROFLOT விமானத்திற்கான
டிக்கட்டுகளை குறைந்த செலவில்
உடனுக்குடன் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| கொழும்பு | பிராக் | ரூ. 8700-00 |
| கொழும்பு | லண்டன் | ரூ. 7700-00 |
| கொழும்பு | கராச்சி | ரூ. 2750-00 |
| கொழும்பு | சிங்கப்பூர் | ரூ. 6500-00 |

(இருவழி ரிக்கட்)
★ PASSENGER SALES AGENT FOR AEROFLOT ★
சகல ரவல் ஏஜன்சிகளும்
Aeroflot விமானத்திற்கான
டிக்கட்டுகளை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
விசேட கமிஷன் வழங்கப்படும்.
★ விசா (VISA) கள் இலவசமாக பெற்றுக்கொடுக்கப்படும்.
ரஸ்ற்ரவல் சேவிஸ்
தலைமையகம்:
HIRDRAMANI ARCADE
65, Chatham Street.
Colombo 1.
தொலைபேசி: 548409
அன்ட் 548811
கிளை:
11 A, மொம்சாக் கட்டிடம்,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8111
(3988)

## தமிழ் மக்கள்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஓ தலைவர் யசர் அரபாத்தே முறியடித்திருக்கின்றார். அவர்களுக்கு எங்கே பாராளுமன்றம்? ஆனாலும், அம்மக்களின் அபிலாஷைகள் உலகறிந்த விஷயம்.

வடக்குக்கும் கிழக்குக்கும் அப்பாற்பட்டு வாழும் தமிழ் பேசும் மக்கள்மீது அக்கறை இல்லை என்று கூட்டணியினர் கூறுவாராயின், எதற்காக அவர்கள் 1960 ஆம் ஆண்டு சிலாபத்திலும், 1977 இல் புத்தளத்திலும் போட்டியிட்டார்களென்பது கேள்வியாகும். அப்படிக் கூறுவார்களாயின், எதற்காக அவர்களுடைய 1977 பொதுத்தேர்தல் விஞ்ஞாபனத்தில், ''தமிழ் தேசிய இனம் இலங்கையில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள எல்லோரையும் குறிக்கும்'' என்று கூறினார்கள் என்ற கேள்வியும் எழும்பும்.

ஜனாதிபதித் தேர்தலைத் தமிழ்ப்பேசும் மக்களைப் பகிஷ்கரிக்கச் சொன்னால், கூட்டணியினர் ஒரு பயனற்ற கோணத்திலிருந்து இந்த விஷயத்தை அணுகுகின்றார்கள் என்றே கூறலாம். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதன் நிமித்தம், இலங்கையில் ஒரு தமிழ்த் தேசிய இனம் இருக்கின்றது; இலங்கையில் இன்னமும் தீர்க்கப்படாத ஒரு இனப் பிரச்னை இருக்கின்றது என்பதை உலகுக்குக் காட்டமுடியும்.

தமிழ்ப்பேசும் மக்களின் அபிலாஷைகள் என்ன என்பதை நாடளாவிய ரீதியில் அறிவதற்கே தமிழர் ஒருவர் போட்டியிடுவது அத்தியாவசியம் என்று நாம்கூறுகின்றோம்.

தமிழ்பேசும் மக்களின் எதிர்ப்பைக் காட்டுவதும், அரசியல் யாப்பை தமிழ்பேசும் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைக் காட்டவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது அவசியமில்லை என்றால், தமிழ் பேசும் மக்களுடைய அபிலாஷைகளைப் பிரதிபலிக்கக்கூடிய விதத்தில் இத்தேர்தலை அணுகலாம்.

அப்படிக் கூட்டணி போட்டியிடத் தயங்கினால், கூட்டணி கேட்கவேண்டிய ஒரேஒரு விஷயத்தை, தமிழ்ப்பேசும் மக்கள் முன்வைக்கவேண்டிய ஒரேஒரு கேள்வியை, அகில இலங்கை தமிழ்காங்கிரஸ் முன்வைப்பதற்குத் தயாராகஇருக்கின்றது. தயங்கமாட்டாது. முன் வருகின்றது. அதாவது, இலங்கையில் வாழும் தமிழ் தேசிய இனம், சிங்களத் தேசிய இனத்தோடு ஒரே நாட்டில் ஒரே அரசின்கீழ் இனிமேலும் சகவாழ்வு வாழ விரும்பவில்லை'' இந்தமுடிவை ஆதரிக்கும் எந்த ஒரு தமிழ் பேசும் மகனும், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட எதிர்பார்க்கும் ஒரே ஒரு தமிழ் வேட்பாளராக இருக்கக்கூடிய எமது அ. இ. த. காங்கிரஸ் வேட்பாளரை ஆதரிக்கும்படி வேண்டுவோம். இந்த முடிவை ஏற்காத எந்த ஒரு தமிழ் மகனும், அந்தத் தமிழ் வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டாமென்று வேண்டுவோம்.

தமிழ்பேசும் மக்களின் தீர்ப்பை — அதாவது இலங்கையில் இன்று வாழும் தமிழ் தேசிய இனத்தின் தீர்ப்பை அ இ த காங்கிரஸ் ஏற்பதற்குத் தயாராக இருக்கின்றது.

# சைக்கிளில் சென்றவர் இடைமறித்து கொலை!

## மந்துவிலில் சம்பவம்

[சாவகச்சேரி]

மந்துவிலைச் சேர்ந்த கந்தையா சின்னத்தம்பி என்னும் 45 வயது நபர் தனது மகள் சிவஜோதிமலர் (18 வயது] என்பவருடன் வீட்டிலிருந்து போக்கன் என்னுமிடத்துக்கு சைக்கிளில் போய்க்கொண்டிருக்கும் பொழுது வழியில் இடைமறித்து பற்றைக்குள் இழுத்துச் செல்லப்பட்டு இருவரால் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இக்கொலைச்சம்பவம் நேற்று முன்தினம் மந்துவிலில் நிகழ்ந்ததைத் தொடர்ந்து நேற்று கொலை நடந்த இடத்துக்குச் சென்று சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி எம். எச். காரியப்பர் மரணவிசாரணை நடாத்திய போது கொலையுண்டவரின் மகள் சின்னத்தம்பி சிவஜோதிமலர் சாட்சியமளித்தார். அவர் தமது சாட்சியத்தில் கூறியதாவது:

''நானும் எனது தகப்பனாரும் வீட்டிலிருந்து வியாழக்கிழமை பகல் 11 மணிக்கு போக்கனுக்குச் சைக்கிளில் போய்க்கொண்டிருக்கும் போது வடிவேலு என்பவரின் வீட்டிலிருந்து 50 யார் தூரத்தில் பற்றைக்குள்ளிருந்து கல்லெறி திடீரென எங்களுக்கு விழுந்தது. அதனைத்தொடர்ந்து இருவர் பற்றைக்குள் இழுத்துச் செல்ல நான் பயத்தினால் எங்கள் வீட்டுக்கு ஓடினேன்.

''எனது தந்தையாரான சின்னத்தம்பி பற்றைக்குள் கொலை செய்யப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்ததை அடுத்து நான் சாவகச்சேரி பொலிஸில் இதுபற்றி முறையீடு செய்தேன். பற்றைக்குள்ளே இருந்து வந்து எங்களை வழிமறித்து தகப்பனாரை பற்றைக்குள் இழுத்துச் சென்றவர்கள் [illegible] என்பவரும் [illegible] என்பவரும் ஆவார்கள். கல்லெறிந்தவரைக் தெரியாது. கண்டால் நான் அவரைக் காண்பிப்பேன்'' என்று தெரிவித்தார்.

## வேலைகளை....

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மேற்படி 3-ம் கட்டவேலைப் பிரிவில் கட்டட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு தற்போது இயந்திர சாதனங்களை இணைக்கும் வேலைகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஜேர்மன் நிபுணர்களின் மேற்பார்வையில் இந்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அமைச்சரின் விஜயத்தை யடுத்து மேற்படி வேலைகள் விரைவாக முடுக்கி விடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## இன்று...

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

மானிப்பாய் எம். பி யான திரு வி. தர்மலிங்கம் தலைமையில் இன்று பிற்பகல் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

திரு. இ. முருகையன் தலைமையில் நடைபெறும் கவியரங்கில் திரு. காரை. செ. சுந்தரம்பிள்ளை, திரு. வே. ஐயாத்துரை, திரு புதுவை. இரத்தினதுரை, திரு. முல்லையூரான், ஆகியோர் பங்குபற்றுவார்கள். தமிழக அரசு பாரதிநூற்றாண்டு விழாக் குழு உறுப்பினர் திரு. தா. பாண்டியன் சிறப்புரை ஆற்றுவார்.

### திறப்பு விழா

[கோண்டாவில்]

கொக்குவில் கிழக்கு வளர்மதி முன்னேற்றக் கழக சனசமூக நிலையத்தின் பத்தொன்பதாவது ஆண்டு நிறைவு விழாவும் புதிய கட்டிடத் திறப்பு விழாவும் இன்று பிற்பகல் நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது. மங்கள விளக்கேற்றிப் புதிய கட்டிடத்தை நல்லூர் எம். பி.யும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவருமான திரு. மு. சிவசிதம்பரம் திறந்துவைப்பார். நூலகத்தை சிவநெறிப் புரவலர் க. கனகராசா திறந்து வைப்பார். ''குற்றக்கூண்டில் பெற்றோர்'' எனும் தலைப்பில் விவாத அரங்கு உட்பட பல கலை நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மரதன் ஓட்டப்போட்டி மற்றும் வேறு போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு திருமதி தர்மரத்தினம் பரிசில்கள் வழங்குவார். நல்லூர் எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் உட்படப் பலர் சிறப்புரை நிகழ்த்தவுள்ளனர்.

# யாழ். மாநகரசபை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தில் தலையிட்டு இழந்த மண்ணினை மீட்டுத் தருமாறு விடுத்த வேண்டுகோளுக்கு செவிசாய்த்து இதனை ஓர் தலையாய கடமையாக நினைத்து இரவு பகலாகப் பாடுபட்டு இழந்த மண்ணினை மீட்டு அதில் சகல வசதிகளுடன் கூடிய 160 வீடுகளை கொண்ட மாடிக் கட்டடத்தினை நிர்மாணித்துத் தந்த செயல் வீரன் திரு வெ. யோகேஸ்வரன் அவர்களின் தீரச் செயலினை நினைவு கூரும் முகமாக இத்திட்டம் அமைந்துள்ள பகுதிக்கு ''யோகேஸ்வரபுரம்'' எனப் பெயரிடுமாறு இச்சபை தீர்மானிக்கின்றது''

இப்பிரேரணையை எதிர்த்து திரு. சாந்திகுமார் பேசுகையில் தெரிவித்தாவது: ''இராணுவத்தை அகற்றி இந்த வீடமைப்புத்திட்டம் உருவாக்கப்படவில்லை. குருநகரில் இப்பொழுது இராணுவ முகாம் இருக்கிறது.

''வண. பிதா பிரான்சிஸ் அடிகளாரும், அமரர் ஜி. ஜி. பொன்னம்பலமும் இக் குடியேற்றத்திட்டம் பற்றி ஏற்கனவே கோரியிருந்தார்கள் இந்நிலையில் யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் போராடியோ, துப்பாக்கி ஏந்தியோ இக்குடியிருப்புத் திட்டத்தைப்பெறவில்லை. பிரதம மந்திரி திரு பிரேமதாசாவின் திட்டம் இது ஆட்சியாளரினால் கிடைத்த அற்ப சலுகை இது. பொதுமக்களை தவறான வழியில் அர்த்தமற்ற தீவிரவாத செயல்களில் தூண்டுவது போல் உதவி முதல்வர் இப்பிரேரணையைக் கொண்டுவந்திருக்கிறார்'' திரு. சாந்திக்குமார் பேசிக்கொண்டிருக்கொண்டிருக்கும்பொழுது தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த திருவாளர்கள் யோ. அ. செல்வநாயகம், எஸ்பீரியல், சுந்தரலிங்கம், சண்முகராசா, துணை முதல்வர் அலோசியஸ் ஆகியோர் குறுக்கிட்டு பேசினர். இக்கூட்டத்தில் சபை அல்லோலகல்லோலப் பட்டது போலிருந்தது.

முதல்வர் உறுப்பினர்களிடையே ஒழுங்கை நிலைநாட்ட வெகு சிரமப்படவேண்டியிருந்தது.

பொறுப்பு வாய்ந்த உறுப்பினர் ஒழுங்காகவும், கட்டுப்பாடாகவும் நடந்து கொள்ள வேண்டுமென்றும் அறிவுறுத்திய முதல்வர், சபை நிலைமையை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து குறிப்பிட்ட பிரேரணையை வாக்கெடுப்புக்குவிட்டார்.

இப்பிரேரணையை தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த பதினொரு உறுப்பினர்கள் ஆதரித்தும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நான்கு உறுப்பினர்கள் எதிர்த்தும் வாக்களித்தனர்.

ஏழு அதிகப்படியான வாக்குகளால் இப்பிரேரணை நிறைவேற்றப்பட்டது. [மா]

## நேர்ந்தளிக்கும்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வத்திக்கானின் ஈழத்துத்தூதுவராய்ப் பணிபுரியும் பேரருள் திரு நிக்கொலா றெட்டுனே கண்டி, மட்டுநகர், திருமலை, மன்னார் மறை மாவட்ட ஆயர்கள் போல் பெரேரா, எல். ஆர். அன்ரனி, தொமஸ் சௌந்தரநாயகம் ஆகியோர் முன்வர, யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர் பேரருள்திரு வ தியோகுப்பிள்ளை அவர்கள் பவனிக்குத் தலைமை தாங்கினார். (மா)

## பருத்தித்துறை நீதவான்

[புலோலி]

பருத்தித்துறை நீதிமன்றத்தில் பதில் நீதவானாக கடமையாற்றிய நீதிபதி திரு. வி. பி. சுந்தரலிங்கம் ஆகஸ்ட் 1-ந் திகதி முதல் பருத்தித்துறை நீதிமன்ற நிரந்தர நீதவானாக நியமனம் பெற்றுள்ளார்.

### சிறப்புரை

''பாலுற்பத்தி - பொருளாதார நோக்கு'' என்னும் பொருள் பற்றி இத்துறையில் சிறப்பாளரான கலாநிதி அ நவரத்தினராசா, யாழ் கால்நடை வளர்ப்போர் சங்கத்தின் ஆதரவில் இன்று பிற்பகல் மூன்று மணிக்கு யாழ். வீரசிங்கம் மணடபத்தில் சிறப்புரை நிகழ்த்துவார்.


# கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணம் மகாத்மாகாந்தி வீதி (மணிக்கூட்டு வீதி) 37ம் இலக்க வளவில் உள்ள மோட்டார் கராஜ் ஒன்றை வாங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

[1] பொறியிடப்பட்ட கேள்விகள் யாவும் முதற்கட்டணம் ரூபா 250/- உடன் நேரிலோ அல்லது பதிவுத்தபாலிலோ என்னால் 10-8-82 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

[2] கேள்விக் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படாதவிடத்து முற்பணம் மீளளிக்கப்படும்.

[3] கராஜ் பாகங்கள் யாவும் கலைக்கப்பட்டு, 31-8-82க்கு முன்னர் வளவில் இருந்து முற்றாக அகற்றப்படவேண்டும்.

முகாமையாளர்,
மெர்க்கன்டைல் கிறெடிற் லிமிட்டெற்,
11/8, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

[4026]



## மரண அறிவித்தல்

### வே. கந்தசாமி

விபுலானந்த அச்சக முதல்வரும் விவேகானந்தா அச்சக முன்னாள் பங்காளருமான சைவப் புரவலர் சிவமணி வே. கந்தசாமி அவர்கள் [illegible] திகதி காலமானார் அன்னாரது பூதவுடல் 31ம் திகதி சனிக்கிழமை காலை மணிமேலன் [illegible] யாழ்ப்பாணத்திலிருந்து காலை 10 மணியளவில் [illegible] கிரியைகளுக்காக செம்மணி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்

4050

## மரண அறிவித்தல்

### தம்பிப்பிள்ளை சுப்பிரமணியம்

சங்கானை உதவி அரச அதிபர்காரியாலய முன்னாள் பிரதம லிகிதரான அளவெட்டியைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை சுப்பிரமணியம் காலமாகி விட்டார்

இவர் சிவக்கொழுந்துவின் அன்புக்கணவரும் டாக்டர் நிர்மலானந்தன் [அவுஸ்திரேலியா], சுந்தரேஸ்வரன் [இறைவரி திணைக்களம், கொழும்பு], கெங்காதரன் (வானதிஸ்ரோர்ஸ் - யாழ்ப்பாணம்), கருணாலயன் [அவுஸ்திரேலியா), ஸ்ரீ காந்தன் (இங்கிலாந்து), திருமதி கலாநிதி சந்திரமோகன் [நைஜீரியா) ஆகியோரின் அன்புத்தந்தையுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அளவெட்டியில் நடைபெறும்.

4045


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஜூலை மீ 31-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81
Eelanadu—P. O. Box 49 Tleegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.